


1920 **100** 2020


# வித்துவான் பொன் முத்துக்குமாரன் – பி.ஓ.ல்.
# நூறாவது பிறந்தநாள் நினைவு மலர்

## VIDWAN PON.MUTHTHUKUMARAN

BACHELOR OF ORIENTAL LANGUAGES (B.O.L.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வரம்பெற்ற ஞான பானு

செந் தமிழும் சிவநெறியும் பாது காக்கச்
சீர்மையுடன் செகமிதிலே தோற்றம் பெற்றோன்
வந்தனைசேர் வரம்பெற்ற ஞான பானு
வையகத்தில் தெய்வமாக வாழ்ந்த வள்ளல்
கந்தனடி கணமேனும் மறவாச் செம்மல்
காசினியின் காந்திமிகு சொல்லின் செல்வன்
சிந்தனைசேர் வித்துவான் பொன் முத்துக் குமாரன்
சேர்ந்தவிடம் சிவபதமே! சாந்தி!! சாந்தி!!!

வித்துவான் க.கணபதிப்பிள்ளை, B.A.
கௌரவ இயக்குனர்
சித்தாந்த சைவ பாதுகாப்புச்சேவை

*டிசெம்பர் 1989ல் திரு பொன்.முத்துக்குமாரன் அவர்களின் நினைவு மலரில் வெளிவந்தது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லற ஞானி

"உள்ளூர்ப் பழுத்ததொரு பயன்மரம், தமிழ் உலகு அந்தக் கனி தரும் மரத்தைப் பேணி வளர்த்துப் பயன் செய்வதாக" இது வித்துவான் பொன் முத்துக்குமாரன் எழுதிய தமிழ்மரபு என்னும் இலக்கண நூலுக்கு இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை வழங்கிய அணிந்துரையில் ஒரு தொடர். வித்துவான் அவர்கள் தலை சிறந்த பேரறிஞர்; இலக்கண இலக்கிய விற்பன்னர்; சைவசமய சாஸ்திரங்களைக் கரைபோகக் கற்றுணர்ந்தவர்; சிறந்த பேச்சாளர்; ஒழுக்கசீலர்; குணமென்னும் குன்றேறி நின்றவர். இதனாலேதான் அந்தக் கனிதரும் மரத்தைப் பேணி வளர்த்துப் பயன் செய்யுமாறு பண்டிதமணி தமிழ் உலகுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார் போலும். சொல்லாற்றல், பொருளாழம், தெளிவு, நகைச்சுவை என்பவற்றை அவர்களின் பேச்சில் கேட்கலாம். கேட்டு நினைத்து நினைத்துச் சிந்திக்கத்தக்க நகைச்சுவை. கையில் எந்தவிதக் குறிப்புக்களோ, புத்தகங்களோ இருக்கா; ஆனால் வாயிலிருந்து செந்தமிழ்ச் சொற்கள் சொரிந்து கொண்டேயிருக்கும்.

**உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின்**

வாக்கினிலே ஒளியுண்டாகும் என்ற பாரதி வாக்குக்கு ஓர் உதாரண புருஷன். வித்துவானின் பேரறிவைத் தமிழுலகம் பயன்படுத்த வேண்டுமென்ற நோக்குடன் முன்னாள் யாழ். அரசாங்க அதிபர் ம.ஶ்ரீகாந்தா அவர்கள் வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் சிலப்பதிகாரச் சொற்பொழிவுகள் தொடர்ந்து நடத்த ஒழுங்கு செய்தார்கள். தமிழறிஞர் பலர் அவற்றைக் கேட்டுச் சுவைத்துப் பயனடைந்தனர். பண்டித வகுப்புக்களில் இலக்கண இலக்கிய பாடங்களை வித்துவானிடம் படித்தவர்கள் அன்னாரின் கற்பிக்குந் திறனையும், கடினமான பகுதிகளையும் எளிதில் விளங்குமாறு எடுத்துச் சொல்லுந் திறனையும் வாயூறி ஊறிக் கூறி மகிழ்வர்.

இறைபணி நின்ற வித்துவானுக்கு இறைவன் பணிப்பு வேறாயமைந்தது போலும். போதனையிலும் சாதனையே சிறந்தது என்ற உண்மையை உணர்ந்தார் போன்று முற்றாக ஆத்மீக வாழ்விலீடுபட்டார். சமய சாஸ்திரங்களில் அவருக்கிருந்த முதிர்ந்த ஞானத்தின் விளைவே இதற்குக் காரணமாயிருக்கலாம். தாமரையிலையில் தண்ணீர்போல அவர்களது வாழ்க்கை பற்றற்ற வாழ்க்கையாயிற்று.

நீரில் படகு தங்குகிறது. ஆனால் படகுக்குள் தண்ணீர் புகும்படி விடக் கூடாது. புகவிட்டால் படகு மூழ்கிவிடும். அப்படியேதான் உலக வாழ்க்கையிலிருக்கும் பக்தர்களின் நிலையும். உலக வாழ்க்கைக்கு வேண்டிய காரியங்களைச் செய்து கொண்டிருக்கலாம். ஆனால், உள்ளத்துள் உலகைப் பாயவிடக் கூடாது. விட்டால் படகு கவிழ்ந்து போகும். 'ஒருகையால் வாழ்க்கைக் கடமைகளைச் செய்துகொண்டு மற்றக் கையால் இறைவன் காலைப் பிடித்துக் கொண்டேயிருக்க வேண்டும். வேலை செய்யாமலிருக்கும்போது இரண்டு கைகளும் ஆண்டவன் பாதங்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்க வேண்டும்.' இது பகவான் ஶ்ரீ இராமகிருஷ்ணரின் உபதேசம். வித்துவான் அவர்களும் அல்லும் பகலும் ஆண்டவனையே தியானித்தபடி வாழ்ந்தார். தினமும் நல்லூர்க் கந்தனைத் தரிசித்துத் தரிசித்து வழிபாடு செய்து வந்தார்.

மனமாசு நீங்கிய தம் அடியவனை முருகப் பெருமான் கார்த்திகை மாதத்துத் திருக்கார்த்திகை நன்னாளில் தம்முடன் அரவணைத்துக் கொண்டார். அன்னாரின் ஆத்மா முருகப்பெருமானின் திருவடி நிழலிற் சாந்தி பெறுவதாக.

A. சரவணமுத்து B.A

*டிசெம்பர் 1989ல் திரு பொன்.முத்துக்குமாரன் அவர்களின் நினைவு மலரில் வெளிவந்தது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வைத்தீஸ்வர வித்தியாலயம் – அதிபர், உப அதிபர் மற்றும் சக ஆசிரியர்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1961ல் வைத்தீஸ்வர வித்தியாலயம் – சக ஆசிரியர்களுடன் இந்தியா சென்றபோது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Mr. Muththukumaran

It is the pleasant duty of the members of a community to remember an outstanding person for the unforgettable service which he had rendered during his life time, though many years have elapsed.

Mr. Pon.Muththukumaran enriched the teaching profession by his invaluable contribution to the children and the school which he adorned as a member of the staff of Vytheeswara Vidyalayam at Vannarpannai. He impressed the principal Mr.Ambikaipahan, fellow teachers, students and parents as a teacher of propound knowledge in tamil and religion. Children always showed a keen desire to study made him. He was one of those who were responsible for producing good results in the G.C.E.O/L and A/L examinations.

As a public speaker he was superb. Once, I was secretary of a religious association and I was responsible for arranging speakers of some high calibre to speak at the meeting. Mr. Pon. Muththukumaran was one of them. He spoke in simple, beautiful tamil intelligible to common man. The speech was pregnant with high ideas which won the appreciation of the educated audience. That was not the first instance where he was recognised by the Jaffna public as one of the erudite scholars. He won the esteem of all at similar meetings by his convincing speeches.

He was an amiable and pleasant character which impressed his friends, relatives and even those who had acquaintance with him for a short time as a religious man he always worshipped at home and temples. His devotion and absolute faith in god might be considered as the course for his popularity and spiritual progress. He was fair in complexion and had an imposing personality. It is hoped that such a person of rare ability and bearing would always be remembered by the members of the tamil community, wherever they may be settled.

M.Eliathamby B.A.
Retired Deputy Principal
Sri Lanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை மகற்காற்று நன்றி......

நான் அப்பாவைப் பார்க்கும்போதெல்லாம் ஒரு மரியாதை கலந்த பயமும் வியப்பும் ஏற்படும். அவருடைய அழகிய தோற்றத்திலும், தமிழ் இலக்கியத்தைப் பற்றிய தெளிவான சிந்தனையிலும் எல்லோரையும் தன்பக்கம் ஈர்க்கக்கூடிய வன்மையிலும் ஒரு வித்தியாசமான தந்தையாக எனக்குத் தோற்றமளித்தார். என் அப்பா நூலறிவோடு நுண்மதியும் வாய்க்கப்பெற்று நாவன்மையில் மிகச்சிறந்து விளங்கினார்.

நான் எட்டாம் வகுப்புப் படிக்கும்போது அப்பாதான் என் தமிழ் ஆசிரியர். அவர் வகுப்பில் பாடம் நடத்தும் தரம் மற்ற ஆசிரியர்களைப் போலல்லாமல் ஒரு சொற்பொழிவு மாதிரி இருக்கும். தன் பேச்சால் எல்லா மாணவர்களையும் தன்பால் ஈர்த்துக் கட்டிப்போட்டுவிடும் தன்மையில் இருக்கும். பாடத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட தமிழ் இலக்கியங்களை மட்டும் கற்பிக்காமல் அவற்றோடு வாழ்வுக்குத் தேவையான நன்னெறிகளையும் திருக்குறளில் இருந்து கிடைக்கும் அறிவியல் சிந்தனைகளையும் முத்துமுத்தான கருத்துகளையும் தக்க இடங்களில் எடுத்துக்காட்டிப் பாடம் நடத்துவார்.

நான் சொல்வது உங்களுக்கு விளங்குகிறதா என்று கேட்டவண்ணம் அவர் கண்கள் முதல் வரிசையில் அமர்ந்திருக்கும் மாணவர்கள் தொடங்கி கடைசி வரிசையில் அமர்ந்திருக்கும் மாணவர்கள் வரை அக்கறையோடு தேடித் செல்லும். பொதுவாக தமிழ் ஆசிரியர்களின் முக்கியத்துவம், விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், பொருளாதாரம், பூகோளம் போன்ற பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களின் வரிசையில் மிகவும் கடைசியில் இருக்கும். இது மிகவும் வருந்தத்தக்கது. தமிழ் படிப்பதில் மாணவர்களுக்கு எந்தவிதமான ஆர்வமும் இல்லை. தமிழைப் படித்து என்ன பயன் என்ற மாதிரியான சிந்தனையுள்ளவர்களாக இருந்தார்கள். ஆனால் அப்பாவின் தமிழ் கற்பிக்கும் முறையாலும், கற்பிக்கப்பட்ட விடயங்களாலும் எங்கள் கல்லூரியின் மாணவர்கள் மத்தியிலும், ஆசிரியர்களின் எண்ணங்களிலும் தமிழ் பற்றிய மேன்மையான கருத்துக்கள் வேரூன்றத் தொடங்கியிருந்தன. மாணவர்களின் தமிழ் பற்றியஅலட்சியப்போக்குமாறிவிட்டிருந்தது. தமிழைமிகவும்விரும்பிப்படித்தார்கள். இது மற்ற மாணவர்கள் சொல்லி நான் அறிந்தது.

அப்பா எனக்குச் சொன்ன அறிவுரைகள் பல. அவற்றில் மிக முக்கியமானது காலம் பொன்னானது என்பது. இந்த அறிவுரையை தன் வாழ்நாள் முழுவதும் பின்பற்றி எங்களுக்கு வழிகாட்டினார். அவர் எந்நேரமும் ஏதாவது படித்துக்கொண்டோ அல்லது எழுதிக்கொண்டோ இருப்பதைக் காண்போம். இதை பார்த்து வளர்ந்த எனக்கு இன்றுவரை நேரத்தை வீணடிக்க மனம் விரும்புவதில்லை. வீட்டில் ஆனந்த விகடன், கலைக்கதிர், மஞ்சரி போன்ற பத்திரிகைகள் இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்டதால் எங்கள் எல்லோருக்கும் வாசிப்புப் பழக்கம் ஒரு முக்கிய பொழுதுபோக்காகவிருந்தது. ஆங்கிலப் புத்தகங்களையும் அப்பா விரும்பிப் படிப்பார்.

பாடசாலை நூலகத்திலிருந்தும், யாழ்ப்பாணம் பொது நூலகத்திலிருந்தும் ஆங்கிலப் புத்தகங்களை இரவல் முறையில் கொண்டுவந்து வாசிப்பார். எங்களையும் வாசிக்கும்படி ஊக்குவிப்பார். **Oliver Goldsmith** என்பவர் எழுதிய **The Vicar of Wakefield** என்ற புத்தகத்தை இந்தியாவிலிருந்த ஒரு நீதிபதி 40 தடவைகள் வாசித்ததாகச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்வார். இந்தப் புத்தகம் யாழ்ப்பாணத்தில் எங்கும் கிடைக்கவில்லை. நான் கொழும்பில் வேலை செய்த காலத்தில் மருதானையில் தெருவோரம் இருந்த பழைய புத்தகக் கடையொன்றில் இப்புத்தகத்தை வாங்கி அப்பாவுக்குப் பரிசளித்தேன். இன்று அது, என் வீட்டு நூலகத்தை அலங்கரித்துக்கொண்டிருக்கிறது.

தமிழ் இலக்கியம் சார்ந்த பொதுக் கூட்டங்களில் பேசுவதற்கு அப்பாவை அழைக்க வருவார்கள். இவற்றில் பட்டிமன்றங்கள், கவியரங்குகள், கலை விழாக்கள், நாட்டிய நாடகங்களும் அடங்கும். இலங்கை வானொலியில் விசேட ஒலிபரப்பாக அப்பாவின் பேச்சுக்கள் ஒலிபரப்பப்படும். காலஞ்சென்ற நீதியரசர் H W தம்பையா QC, வைத்திய கலாநிதி சிவஞானசுந்தரம் போன்றோரின் பெருமுயற்சியால் இலங்கையில் கம்பன் கழகம் 1964ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இதற்கு அப்பாவைத் தலைவராக அமர்த்தி அழகு பார்த்தனர். தமிழ் அறிஞரும் பிரபல கதாசிரியருமான சொக்கன் என்று அழைக்கப்பட்ட காலஞ்சென்ற சொக்கலிங்கம் அவர்கள் காரியதரிசியாகப் பணியாற்றினார். முதலாவது கம்பன் விழா நடைபெற்றபோது இந்தியாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் தமிழ் அறிஞர்கள் பலர் பங்குபற்றி விழாவைச் சிறப்பாக்கினர். இவர்களில் பேராசிரியர்கள் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார், அ.ச.ஞானசம்பந்தன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். ஓவியப் போட்டிகள், கவியரங்கங்கள், விவாத மேடைகள் என்பன நிகழ்ச்சிகளுக்கு மெருகூட்டின. ஓவியப்போட்டியில் பங்குபெறும் கலைஞர்கள் கம்பராமாயணத்திலிருந்து ஒரு பாட்டின் வரிகளை அடிப்படையாக வைத்து ஓவியத்தை வரைய வேண்டும். உதாரணமாக அண்ணலும் நோக்கினார் அவளும் நோக்கினாள் எனும் சொற்றொடர். இராமன் வீதியில் சென்றுகொண்டிருக்கும்போது மாடத்திலிருந்து சீதை கீழே நடந்து செல்லும் இராமனைப் பார்க்கிறாள். அதேவேளை இராமனும் சீதையைப் பார்க்கிறார். இதை ஓவியமாக ஒருவர் படைத்திருந்தார். இந்த ஓவியப்போட்டியில் கிடைக்கப்பெற்ற ஓவியங்கள் எல்லாம் எங்கள் வீட்டிலேயே நடுவர்களால் பரிசீலிக்கப்பட்டன. அவற்றையெல்லாம் பார்க்கும் வாய்ப்பு சின்ன வயதில் கிடைத்தது என் பேறு எனலாம். கவியரங்குகளில் உள்ளூர்ப் புலவர்கள் தங்கள் புலமையை வெளிக்கொணர்ந்தனர். தமிழ் இசைக் கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர். இவர்களுள் முக்கியமானவர் தவில் மேதை தட்சணாமூர்த்தி ஆவார்.

1966ம் ஆண்டில் முதலாவது உலகத்த தமிழாராய்ச்சி மாநாடு மலேசியாவின் தலைநகரமான கோலாலம்பூரில் நடைபெற்றது. இதை ஒழுங்கு செய்தவர் யாழ்பாணத்தைச் சேர்ந்தவரும், கோலாலம்பூரில் பேராசிரியராகக் கடமை யாற்றியவருமான தனிநாயகம் அடிகள் அவர்கள். இம்மாநாட்டிற்கு இலங்கையிலிருந்து சென்று கலந்துகொண்ட தமிழ் அறிஞர்களில் அப்பாவும் ஒருவர். இம் மகாநாட்டில் சங்கத் தமிழ் புலவர் கணியன் பூங்குன்றனாரின் பாடல் ஒன்றிலிருந்து யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற வரி ஒரு முக்கியச் செய்தியாக உலகெங்குமிருந்து வந்து பங்குபற்றிய அறிஞர்களால் தங்கள் நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இம் மாநாட்டிற்கு மேற்குலக நாடுகளிலிருந்தும் கீழைத்தேய நாடுகளிலிருந்தும் பங்குபற்ற வந்திருந்த அறிஞர்கள் தமிழ் பற்றிய தம் ஆராய்ச்சிக் கட்டுரைகளைச் சமர்ப்பித்தனர். சில கட்டுரைகள் வாசிக்கப்பட்டன. மாநாடு முடிவுற்றதும் அப்பா மலேசியா, சிங்கப்பூரில் சில நாட்கள் தங்கிச் சொற்பொழிவாற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக் கம்பன் கழகம்

பெருந்தலைவர்:
நீதியரசர், கலாநிதி
H. W. தம்பையா Q. C.

பொருளாளர்:
திரு மு. கணபதிப்பிள்ளை

தலைவர்:
வித்துவான்
பொன். முத்துக்குமாரன் B. O. L.

துணைச்செயலாளர்கள்.
புலவர் சி. செ. சோமசுந்தரம்
திரு. ஆ. கல்யாணசுந்தரேசன் B. A.

செயலாளர்:
திரு. க. சொக்கலிங்கம்
(சொக்கன்)

______________ 196

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் அப்பா பல காலமாகப் பணியாற்றினார். அந்தக் கல்லூரியின் அதிபர் சு.அம்பிகைபாகன் அவர்கள் அப்பாவின் பேச்சுக்களால் கவரப்பட்டு, அப்பாவை வெளியுலகம் பாராட்டவேண்டும் என்று மிகவும் பாடுபட்டார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர் பதவியொன்று வெற்றிடமான போது அதை நிரப்புவதற்குப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் செல்வநாயகம் மிகுந்த பிரயத்தனப்பட்டார். வழக்கமான நடைமுறைகளிலிருந்து மாறுபட்டுத் தகுந்த தமிழ்ப் புலமை வாய்ந்த அறிஞரைத் தெரிவுசெய்ய விரும்பினார். திரு. அம்பிகைபாகன் அவர்கள் அப்பாவின் பெயரைப் பரிந்துரை செய்தார். அப்பா பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் இரண்டு வருடங்கள் விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

அப்பாவின் தமிழ் பேச்சுக்களால் இலங்கை வாழ் தமிழ் மக்கள் கவரப்பட்டனர். அப்பா பணியாற்றியதால் வைத்தீஸ்வர வித்தியாலயத்தின் பெயரும் வெளியுலகத்திற்குத் தெரிய வந்ததாகத் திரு அம்பிகைபாகன் அவர்கள் பெருமையோடு கூறுவார். இது அவரின் தன்னடக்கத்திற்குச் சான்று. வைத்தீஸ்வர வித்தியாலயத்தின் முன்னேற்றத்திற்குத் திரு அம்பிகைபாகன் அவர்களும் திரு வைரமுத்து அவர்களும் ஆற்றிய பணி யாவரும் அறிந்ததே. சிறு கொட்டிலாக இருந்த பாடசாலையை ஒரு உயர்தர பாடசாலையாக மாற்றிய பெருமை இவர்கள் இருவரையுமே சாரும். நான் இந்தப் பாடசாலையில் முதலாம் வகுப்பு மாணவனாகக் சேர்ந்து பல்கலைக்கழகத்தில் பொறியியல் படிப்புக்குச் செல்லும்வரை படித்தேன். எனவே நான் எங்கள் பாடசாலையின் வளர்ச்சியை அனுபவரீதியாக உணர்ந்தவன்.

அப்பா எனக்கு எழுதிய கடிதங்கள் பலவற்றை நான் சேகரித்து வைத்திருக்கிறேன். தூய தமிழில் பல சுவையான செய்திகளுடன் நல்ல கருத்துகளையும் அப்பா எழுதுவது வழக்கம். ஒருமுறை நான் சிங்கப்பூரில் பணியில் இருந்து விடுமுறைக்காக யாழ்ப்பாணம் சென்றபோது பல குடும்பச் செய்திகளையும் சில சம்பவங்களையும் அப்பா என்னோடு பரிமாறிக்கொண்டிருந்தார். சில விடயங்களில் நான் மாறுபட்ட கருத்துக் கொண்டிருந்ததனால் அப்பாவிடம் சிறிது கோபமாகப் பேசிவிட்டேன். நான் சிங்கப்பூருக்கு விமானத்தில் செல்லும்போது என் மனம் இந் நிகழ்ச்சியை நினைந்து வேதனைப் பட்டது. நான் அந்த வார்த்தைகளை உபயோகித்திருக்கக் கூடாது என்று கவலைப்பட்டேன். அந்த நாட்களில் எங்கள் யாழ்ப்பாண வீட்டில் தொலைபேசி இருக்கவில்லை. என் தவறிற்காக மன்னிப்புக் கோரி உடனே கடிதம் எழுதிப் போட்டுவிட்டேன். அப்பாவின் பதிலுக்காகத் தினமும் காத்திருந்தேன். கடிதமும் வந்தது. அப்பாவின் பதில் என் வாழ்நாளில் மறக்கமுடியாதது."நீ சிறு குழந்தையாக இருந்தபோது நான் உன்னைத் தூக்கி வைத்திருப்பேன். நீ உன் பிஞ்சுக் கால்களால் என் மார்பில் உதைப்பாய். அந்தப் பிஞ்சுக் கால்களால் அன்று உதை வாங்கும்போது இரசித்து அனுபவித்த நான் இப்போது உன் வாய்ச்சொற்கள் பட்டா புண்படுவேன்?" இந்த வரிகளை வாசித்தபோது என் கண்களிலிருந்து பொலபொலவென்று வழிந்த கண்ணீரை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை.

அப்பா தன் பேச்சுக்களில் உண்மை வீரன் யார் என்று அடிக்கடி கேட்பார். ஆயுதம் தாங்கிப் போருக்குச் சென்று பகைவர்களை வீழ்த்துபவனல்ல வீரன். போர்வீரனும் செய்யமுடியாத பெருவீரம் ஒன்று உண்டு. அதனை மிகச்சிலரே செய்ய மாட்டுவர் என்ற வள்ளுவர் கூற்றை அப்பா குறிப்பிடுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“பகையகத்துச் சாவார் எளியர் அரியர்
அவையகத்து அஞ்சா தவர்”

பகை முன் வெல்வதை விட அவைமுன் செல்லுதல் வீரற்கும் எளிதன்று.

நான் இங்கிலாந்தில் உயர்கல்வி கற்கச் சென்றபோது எங்கள் பேராசிரியர் எங்களுக்கு ஒரு பணி கொடுத்திருந்தார். மாணவர்கள் தங்கள் அனுபவத்தில் கிடைத்த முக்கியமான பொறியியல் செய்தியை எல்லா மாணவர்களிடமும் பகிர்ந்து கொள்ளவேண்டும். நான் தமிழிலேயே எங்கும் சபையில் பேசியதில்லை. ஆங்கிலத்தில் அதுவும் இங்கிலாந்து போன்ற ஒரு வெளிநாட்டில் எப்படி உரையாற்றுவது என்று நடுங்கிக் கொண்டிருந்தேன். என்முறை வந்தது. எல்லார் கண்களும் என்மேல் இருந்தன. பல்கலைக்கழக பேராசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் வெள்ளைக்காரார்கள். அக்கணம் அப்பாவை ஒருமுறை நினைத்தேன், அப்பா சொன்ன திருக்குறளை யோசித்தேன். என் பயம் முற்றாகப் போய்விட்டது. மிகவும் நிதானமாக நான் சொல்ல வந்ததைச் சொல்லி முடித்தேன். எல்லோரும் பாராட்டினார்கள். நான் சொன்ன செய்தி பாடத் திட்டத்திலும் சேர்க்கப்பட்டது.

அப்பா சாதாரண ஒரு தந்தையாக இல்லாமல் பாரதியார் குறிப்பிட்டது போல: நண்பனாக, மந்திரியாக, நல்லாசிரியனுமாக, பண்பிலே தெய்வமாக, பார்வையிலே சேவகனாக எங்கள் மத்தியில் விளங்கினார் என்றால் அது மிகையன்று.

மு. தயாநிதி
சிட்னி, அவுஸ்திரேலியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மாணவரின் மொழியறிவை மரபு வழிப்படுத்தியவர்

திசையெங்கும் பரந்து விரிந்து அலை எறியும் கடல்போலக் காற்றில் அசைந்து ஆடிய வண்ணம் நெற்பயிர்கள் செறிந்த பெருவயல் அது. அப்பயிர்களின் தாள்களுக்கிடையே நெல்மணிகள் நிறைந்த பசுங்கதிர்கள் தலை நிமிர்ந்து நிற்கின்றன. இந்தக் காட்சியைக் கண்களால் அனுபவித்த புலவர் ஒருவர், தன் கருத்து ஒன்றினைத் தம் உள்ளத்திலே உருவாக்கியவண்ணம் மௌனமாக நடந்து செல்கின்றார்.

இரு வாரங்களின் பின் மீண்டும் அவர் அதே வயற் காட்சியைக் காண நேர்கிறது. ஆனால் காட்சியிலே ஒரு சிறு மாற்றம். முன்பு பாரமற்றுத் தலை நிமிர்த்தி நின்ற நெற்கதிர்கள் பசுமை மாறிப் பழுத்த நிலையில் தலைசாய்ந்து நிற்கின்றன.

**முதிர்ச்சியின் அறிகுறி!**

முன்பு புலவர்தம் நெஞ்சிற் குடியேறிய கருத்துக்கு முழுமை உண்டாகி விடுகின்றது. கருத்து நிறைந்தால் கவிஞராலே சும்மா இருக்க முடியுமா? பசுமையாய் தலைநிமிர்த்தி நின்ற நெற்கதிர் அற்பர்களான செல்வர்களது ஆணவத்திமிர்ப்புக்கும், முற்றி முதிர்ந்து சாய்ந்த நெற்கதிர்கள் நூல்வல்ல சான்றோரின் பணிவோடு கூடிய அடக்கத்திற்கும் ஒப்புமைகளாகி ஓர் அரிய பாட்டுப் பிறந்து விடுகின்றது.

**சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் தோற்றம்போல்**
**மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்**
**செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்தநூல்**
**கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே**

என்பதே அந்தப் பாட்டு; சீவக சிந்தாமணியில் திருத்தக்கதேவர் பதித்து வைத்துள்ள மணிப்பாட்டு.

எம்காலத்திலே, முதிர்ந்த நெற்கதிர் போலத் தமிழ் இலக்கண, இலக்கியக் கல்வியாலும் சைவ சித்தாந்தக் கல்வியாலும் முற்றி முதிர்ந்து, அதே போது அடக்கத்திற்கும் பண்பாட்டிற்கும் எடுத்துக் காட்டாய் விளங்கியவர் அமரர் வித்துவான் பொன்.முத்துக்குமார பி.ஓ.எல். என்பதை அவரை நன்கு அறிந்தார் அறிவர். அறிந்தவர் என்றும் அவரைப் போற்றவும் தவறார்.

பொன்னாலையிலே பொன்னுத்துரை அவர்களது அன்புப் புதல்வராய் 1920-05-05 இல் தோன்றிய முத்துக்குமாரன் தம் உடல் நிறத்தாலும் உள்ளத் தகைமையாலும் மாற்றுயர்ந்த பொன்னாகவே விளங்கிப் பொன் என்ற சொல்லுக்கும் பொருளுக்கும் பூரண அர்த்தத்தை வழங்கியவர் என்பது குறிப்பிடத்தக்க உண்மையாகும். ஆசாரங்கள் நிறைந்ததும் இறை பக்தி மிக்கதும் பண்பாட்டு விழுமியங்களை மதித்துப் போற்றுவதுமாகிய சைவப் பெருங்குடி ஒன்றின் வழித்தோன்றல் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளமைக் கல்வியை நிறைவு செய்துகொண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சென்ற முத்துக்குமாரன், அங்கு வித்துவான் தேர்விலும் கீழைத்துறை மொழிக் கலைமாணித் தேர்விலும் (பி.ஓ.எல்.) சிறப்புடன் தேறினார். சோழவந்தான் கந்த சுவாமியாரிடம் தமிழிலக்கணத்தைச் "செவிவாயாக நெஞ்சுகளனாகக் கேட்டது கேட்டது விடாதுளத் தம்மைத்துக்" கொண்ட இந் நல்லறிஞர் மேலைச் சிவபுரித் தமிழ்க் கல்லூரியிலும் சில ஆண்டுகள் தமிழ் விரிவுரையாளராய்ப் பணி புரிந்து தாயகம் திரும்பித் தம் அயலூரும் பின்னர் நிலையூருமாகிய சுழிபுரத்தில், விக்ரோரியாக் கல்லூரியில் தமிழ் ஆசிரியராய்த் தம் சேவையைத் தொடர்ந்தார்.

**ஆய்ந்து அறிந்து அடங்கிய சான்றோன் வித்துவான் பொன். முத்துக்குமாரன்!**

முத்துக்குமாரனின் அறிவும் ஆற்றலும் குன்றின் மேல் விளக்காய் நாடெங்கும் சுடர்விட்டோங்கவும், அவரின் ஆசிரிய ஆளுமையில் துளைந்து துளைந்து ஆட மாணவருக்கு வாய்ப்பு மேலும் அதிகமாகவும் அமைய வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயம் அரங்கமைத்துக் கொடுத்தது. அமரர். ச.அம்பிகைபாகன் அவர்கள் முத்துக்குமாரனின் வரிசை அறிந்து மதிப்பளித்தமையும், சக ஆசிரியர்கள் அவர்தம் அறிவாளுமையையும் சீலத்தையும் போற்றியமையும் வரலாறறிந்த செய்திகளாகி விட்டன.

பொன். முத்துக்குமாரன் செஞ்சொல் வல்லார்; செலச் சொல்லும் ஆற்றல் மிக்கார். சொல்லுவது அறிந்து, தெளிந்து கேட்போர் அறிவும் தெளிவும் அடையுமாறு சொற்பொழிவாற்றுவதில் இணையிலார். நேரவரையறை, சொற்றெரிவு வரையறை, மேற்கோள் வரையறை, வாக்கிய வரையறை என்று யாவற்றையும் வரையறை செய்துகொண்டு இவர் தமது சொற்பொழிவுகளை நிகழ்த்தி வந்தமையால் "இன்னும் தொடர்ந்து பேசாரா?" என்று அவையோர் உள்ளங்கள் எதிர்பார்த்து ஏங்கும் அளவிற்குத் தலைசிறந்த நாவலராகத் திகழ்ந்தார்.

தமிழ் மாணவரின் மொழியறிவை மரபு வழிப்படுத்தி பிழையற எழுதவும், பேசவும் வழிகாட்ட என இவர் எழுதிய தமிழ் மரபு என்ற பாடநூல் இந்த வரிசையில் இதுகாறும் வெளியான நூல்களிலே தலை சிறந்தது என்று கூற அறிஞர்கள் தயங்கார். இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை இதன் தரத்தினைப் பல தன் படப் பாராட்டியுள்ளார்.

"இந்நூலைத் தந்துதவிய வித்துவான் பொன் முத்துக்குமாரன் பி.ஓ.எல். தமது உபகார விசேஷத்தினால் உள்ளூர்ப் பழுத்ததொரு பயன் மரம் ஆயினார். தமிழ் உலகு அந்தக் கனிதரும் மரத்தைப் பேணி வளர்த்துப் பயன் செய்வதாக"

இந்தப் பயன்தரும் கனிமரம் தமிழுக்கு வழங்கிய நூற்கனிகள் **சிலம்பின் சிறப்பு, இன்பத் தமிழ், செந்தமிழ்த் தேன்** என்பன மாணவர்க்கு வழங்கிய சுவைக்கனிகள். தமிழ் மரபு உட்பட மாணவர் கட்டுரைகள், தமிழ் இலக்கியம், இந்துசமய பாடத்திரட்டு என்பன. இவை மறுபதிப்புப் பெற வேண்டியவை. முத்துக்குமாரன் அவர்களின் தம்பி முறையினரான பிரபல எழுத்தாளர், பதிப்பாளர், அச்சக உரிமையாளர் வரதர் நினைத்தால் தமிழுலகம், சிறப்பாக மாணவர் உலகும் மேலும் பயன்பெற வழி திறக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பயன்தரு மரத்தின் பூரண பெறுமதியையும் உணர்ந்து கொள்வதற்கும் ஒரு தகுதி வேண்டும். அந்தத் தகுதி அதிபர் அம்பிகைபாகனுக்கு இருந்ததோடு பல்கலைக் கழக மேலிடத்திற்கு பரிந்துரைக்கவும் முடிந்ததால், பேராதனைப் பல்கலைக் கழகத்தில் ஈராண்டுகள் உதவித் தமிழ் விரிவுரையாளராகவும் முத்துக்குமாரன் பணியாற்றினார்.

ஆனால்..... பல்கலைக்கழக கல்வி முறையில் ஆய்வுக்குக் கொடுக்கப்படும் மதிப்பு மரபு வழிக்கல்விக்கும் கொடுக்கப் பட்டிருக்குமானால் ஈராண்டுகள் பதின்மடங்காக நீண்டிருக்கலாம் என்றே நினைக்கத் தோன்றுகிறது.

சொக்கன்

*(பொன்.முத்துக்குமாரனின் மறைவையொட்டி 24.12.1989இல்*
*வீரகேசரிப் பத்திரிகையில் வெளிவந்த கட்டுரை)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்தால் உயர்ந்த உத்தமன்

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்**
**தெய்வத்துள் வைக்கப் படும்"**

என்பது தெய்வப்புலவர் திருவாக்கு. வாழ்வாங்கு என்றால் "உலகத்தில் வாழ வேண்டிய அறநெறியில் நின்று வாழ்கின்ற முறை" என்பதாம். வித்துவான் பொன்.முத்துக்குமாரன் உலகில் வாழ்வாங்கு வாழ்ந்த உத்தம புருஷன். நூலின் நற்பொருள் கற்கக் கற்க இன்பம் தரும். அதுபோன்று நற்பண்புடையாளர்களின் நட்பு பழகப் பழகத்தான் அதன் அருமை பெருமை தெரியும். வித்துவான் அவர்கள் தலைசிறந்த கல்விமான். ஆழ்ந்து அகன்ற நுண்ணிய அறிவுடையவர். "ஆன் றவிந் தடங்கிய கொள்கைச் சான்றோன்" என்ற சொற்றொடருக்குத் தகுதி வாய்ந்த அறிஞன். உயரிய சிந்தனையாளன். அடக்கமும் பொறுமையுமே உருவானவர்.

எமது ஈழவளத் திருநாட்டில் தமிழ்ச் சான்றோர் பலர் வாழ்ந்துள்ளனர். இன்றும் வாழ்கின்றனர். அவர்களுட் சிலர் தமிழ் இலக்கியத்தில் மாத்திரம் வல்லுநர். சிலர் தமிழ் இலக்கணத்தில் மாத்திரம் அறிஞர். வேறு சிலர் சைவ சமய சாஸ்திரங்களில் மாத்திரம் பாண்டித்தியம் பெற்றவர். வித்துவான் அவர்களோ தமிழ் இலக்கியம், இலக்கணம், சைவ சாத்திரங்கள் ஆகிய எல்லாவற்றிலும் சங்ககால இலக்கியங்கள், இடைக்கால இலக்கியங்கள், பிற்கால இலக்கியங்கள் எல்லாவற்றிலும் பூரண அறிவுடையவர். இலக்கணத்தில் தொல்காப்பியம் முதல் பிற்காலத்தெழுந்த இலக்கண நூல்கள் எல்லாவற்றையும் துறைபோகக் கற்றுணர்ந்தவர். இவ்வளவிற்கும் காரணம் அவரது நுண்ணறிவும் அவருக்கென இயல்பாக அமைந்துள்ள அபார ஞாபகசக்தியுமேயாம். எதனைக் கேட்டாலும், எதனைக் கற்பித்தாலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பாடல்களை மனனமாகக் கூறி விளக்குவது அவரது இயல்பு. அவரது ஞாபகசக்தி இறைவன் கொடை.

தமிழ் இலக்கணமென்றால் மாணவர் மத்தியில் ஒரு கசப்புணர்வு. வித்துவானிடம் கற்கும் மாணவர்களுக்கு இலக்கணம் ஓர் இனிப்பு. எந்தக் கடினமான இலக்கணப் பகுதியையும் பொருத்தமான இலக்கிய உதாரணங்களுடன் தெளிவுபட விளக்குவதில் வல்லவர். கற்போருக்கு அலுப்பு ஏற்படாது. பேராதனைப் பல்கலைக் கழகத்தில் இரண்டு வருடங்களாக அவரிடம் இலக்கணம் படித்த பட்டதாரி வகுப்பு மாணவர் அவரின் ஆழமான இலக்கண அறிவையும் உதாரணங்களை எடுத்துக்காட்டி தெளிவுபடக் கற்பிக்கும் ஆற்றலையும் வியந்து கூறுவர். பண்டித பரீட்சைக்கு அவரிடம் இலக்கணம் படித்தவர்கள் இன்றும் அவருடைய திறமையை வாய்யூறி ஊறிப் புகழ்ந்து கூறுவர்.

வித்துவானுடைய மேடைப்பேச்சு தனி ஒரு சிறப்பு. கேட்கக் கேட்கத் தெவிட்டாத பேச்சு; சொற்சுருக்கம்; ஆழ்ந்து அகன்ற பொருள் அடக்கம்; இடையிடையே நகைச்சுவை; இனியகுரல்; நேரக்கட்டுப்பாடு; கற்றோர் மாத்திரமன்றி கல்லாதோரும் அறிந்து கொள்ளத்தக்க பேச்சுத் திறன்; அவருடைய சொற்பொழிவில் இவையெல்லாம் அடங்கும். தமிழ் ஆற்றலையும், பேச்சுத்திறனையும் அறிந்த யாழ்ப்பாணத்துக் கல்விமான்கள் சிலர் அவர்மூலம் கம்பராமாயணத் தொடர் சொற்பொழிவுகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலப்பதிகாரத் தொடர் சொற்பொழிவுகள் நிகழ்த்த ஒழுங்கு செய்தனர். கம்ப இராமாயணச் சொற்பொழிவுகள் அக்காலத்து உயர்நீதிமன்ற நீதியரசர் திரு. H.W தம்பையா Q.C அவர்கள் தலைமையிலும் சிலப்பதிகாரச் சொற்பொழிவுகள் யாழ். அரசாங்க அதிபர் திரு.ம.ஸ்ரீகாந்தா அவர்கள் தலைமையிலும் நிகழ்ந்தன. ஆங்கிலங் கற்ற தமிழ்ப் பேரறிஞர் பலர் கலந்து பயன் பெற்றனர். அவருடைய அறிவாற்றலையும், பேச்சாற்றலையும் உளமாரப் பாராட்டினர்.

சைவ சமயச் சாத்திரங்களை, தோத்திரங்களை நன்கு கற்றவர்.

**"கற்க கசறட கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக"**

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கமைய கசடு அற (சந்தேகம் நீங்க)க் கற்றது மாத்திரமன்றி, கற்றபடி வாழ்ந்தவர். சமய நெறிப்படி வாழ்ந்தவர். தாமரை இலையில் தண்ணீர்போல பற்றற்ற வாழக்கை வாழந்தவர். எல்லாம் சிவன் செயல் என்ற உயரிய சிந்தனையுடன் எந்த நேரமும் சிவசிந்தனையுடன் வாழ்ந்தவர். தூய்மையான சமய வாழ்க்கைக்குத் தடையாயுள்ளவற்றைத் தவிர்த்து விடுதல் அன்னாரின் இயல்பு. உதாரணமாக ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிடலாம். அவரின் மேடைப்பேச்சு பலரையும் கவர்ந்தமையால் புகழ் வந்து குவியத் தொடங்கியது. புகழும் சமய வாழ்வுக்குத் தடையென்பதை உணர்ந்தார். உடனேயே சொற்பொழிவுக்குச் செல்வதை நிறுத்திக்கொண்டார்.

யாழ்.வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் கடமையாற்றிய காலத்தும் உத்தியோகத்தினின்று ஓய்வுபெற்ற பின்னும் ஒவ்வொரு நாளும் நல்லூர்க் கந்தன் ஆலயத்திற்குச் சென்று வழிபடுதலை வழக்கமாகக் கொண்டவர். அவருடைய ஆலய வழிபாட்டிலும் தனிப் பெருஞ் சிறப்பு என்னவென்றால் ஆலயத்துக்குச் சென்று வழிபாடு செய்து வீட்டுக்குத் திரும்பி வரும்வரை எவருடனும் வீண் வார்த்தை பேசமாட்டார். திருமுறைப் பாடல்களை வாயில் மெல்லமாக ஓதிக்கொண்டு இறை சிந்தனையுடனேயே செல்வார். திரும்பி வரும்போதும் அவ்வாறே. ஆலயத்தை அடைந்ததும் முருகப் பெருமானை வணங்கிவிட்டு பூஜை ஆரம்பிக்கும் நேரம்வரை ஆலயத் திருத்தொண்டில் ஈடுபடுவார். அப்பொழுதும் வாய் திருமுறைகள் ஓதும். பூஜைகள் நிறைவெய்தியதும் வழிபாட்டினை முடித்துக் கொண்டு ஆலய உள்வீதியில் அமர்ந்து தியானத்தில் ஈடுபடுவார். மாலைப் பொழுதானதும் வீடு திரும்புவார்.

வித்துவான் பொன்.முத்துக்குமாரன் தலைசிறந்த கல்விமான். ஒழுக்க சீலர். சிறந்த மேடைப் பேச்சாளர். சைவப் பெரியார். கல்வி அறிவு ஒழுக்கங்களாற் சிறந்து விளங்கிய வித்துவான் அவர்கள் ஒவ்வொரு கணமும் இறை சிந்தனையுடன் வாழ்ந்து பிறவிப் பயனை எய்திவிட்டார்கள். வித்துவான் மனிதருள் ஒரு மாணிக்கம்.

அ.சரவணமுத்து **B.A.**

முன்னாள் ஆசிரியர் யாழ்.வைத்தீஸ்வர வித்தியாலயம்
09.11.1999

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் முத்துக்குமாரன் என் சித்தப்பா

நிலையில்லா உலகில் தன் புகழை நிலை நிறுத்திய பேராளர்களில் என் சித்தப்பாவும் ஒருவர். தோன்றில் புகழோடு தோன்றுக என்ற வள்ளுவர் ஆணைக்குப் பொருத்தமாக சபை நடுவே மதிப்பாக இருப்பதற்கு ஒரு பிள்ளை வேண்டும், குலதெய்வத்துக்குப் பூசை செய்ய ஒரு பிள்ளை வேண்டும், ஆசைக்கு ஒரு பெண் பிள்ளை வேண்டும் என, அவர் தாயார் எங்கள் அப்பாச்சி பிள்ளையார் நோன்பு இருந்து வேண்டியதற்கு ஏற்ப பிறக்கும் போதே புகழோடு பிறந்தவர் சித்தப்பா என்பது பலர் அறியாத, எல்லோரும் அறியவேண்டிய உண்மை. இது எங்கள் பிள்ளையாரின் கருணைக்கும் பெருமைக்கும் இனிய அடையாளம்.

இளமையிலேயே தாயை இழந்து தந்தையின் அரவணைப்பில் வளர்ந்தவர். தாய் உயிருடன் இருந்திருந்தால் இவரைப் பிரிய மனமில்லாது ஊருடனே இருந்து கல்வியில் சிறக்க ஆவன செய்திருப்பார். அப்படிச் செய்திருந்தால் இவர் அண்ணனும் மேற்படிப்பு படிக்க வாய்த்திருக்கும். தாயார் இளமையில் மறைந்ததால் சித்தப்பா தான் விரும்பியபடி அண்ணாமலைப் பல்கலைக்கழகக் கல்வியைப் பெற்றார் என்பர் அயலவர்.

சித்தப்பா தான் பல்கலைக்கழகம் செல்லுமுன்னரே தன் கல்வித்துறைக்கு வேண்டிய கல்வி ஆயத்தத்தைச் செய்ததாகப் பிற்காலத்தில் எனக்குக் கூறியிருந்தார். அதாவது, பல்கலைக்கழகத்தில் சேருமுன்னரே திருக்குறள் முழுவதையும், நன்னூல் சூத்திரங்கள் முழுவதையும் மனப்பாடம் பண்ணியிருந்தாராம். அப்படி ஆயத்தம் செய்திருந்ததால் பல்கலைக்கழகத்தில் கற்கும் காலத்தில் அங்கிருந்த நூலகத்தை நன்கு பயன்படுத்தக் கூடியதாக இருந்தது என்றார் .

இதேபோல பல்கலைக்கழக நிகழ்ச்சி ஒன்றையும் கூறியிருந்தார். பண்டிதமணி கதிரேசன் செட்டியார் தங்களுக்குப் பாடம் நடத்திக்கொண்டிருந்தபோது ஒருநாள் பச்சையப்ப முதலியார், செட்டியாரிடம் வந்திருக்கிறார். அப்போது, முதலியார் தான் ஒரு பல்கலைக்கழகத்தை ஆரம்பிக்க இருப்பதாகவும் அதற்கான செயல்களில் பண்டிதமணி கதிரேசன் செட்டியாரின் ஒத்துழைப்பையும் வேண்டியிருக்கிறார். செட்டியாரின் செயற்பாட்டிற்காக ஐந்து ரூபாய் நோட்டுக்களாலான 1000 ரூபாய் கட்டொன்றையும் முதலியார், செட்டியாரிடம் கொடுத்திருக்கிறார். அதைப்பார்த்துத் தானும் தன்னுடன் இருந்த மாணவர்களும் பெருவியப்பு அடைந்ததாகவும் அக்காலத்தில் 1000 ரூபாய் என்பது இக்காலத்து 10 இலட்சம் ரூபாவிலும் பெறுமதி மிக்கது என்றும் கூறினார். இப்படியெல்லாம் பச்சையப்ப முதலியார் முயன்றும் கூட அவரால் பச்சையப்பன் கல்லூரி அமைக்க முடிந்ததேயன்றி பல்கலைக்கழகம் அமைக்கும் தன்மை அவருக்குக் கிடைக்கவில்லை என்றும் பச்சையப்ப முதலியாரின் பெருந்தன்மைகளைக் குறித்து 100 பாடல்களைக் கொண்ட ஒரு அந்தாதி பாட எண்ணி 76 பாடல் வரை எழுதியதாகவும் அறிந்தேன். பச்சையப்ப முதலியாரின் அதிட்டக் குறைவோ நம் அதிட்டக் குறைவோ, அந்த அந்தாதியில் 76 பாடல்கள் கூட வெளிவரவில்லை.

சித்தப்பாவுக்குச் சோதிடம் பற்றி அடிப்படை அறிவும் தெளிவாக இருந்தது. அவருக்கு ஒரு பெண் குழந்தை பிறந்து சில காலத்தில் இறந்தது என அறிந்திருக்கிறேன். எங்களுக்குத் தெரியத்தக்கதாக அவர் மகன் சம்பந்தன், தான் விரும்பிய ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறித்தவப் பெண்ணைத் திருமணம் செய்தார். அவர் செயல் சித்தப்பாவுக்கு மாத்திரமன்றி சைவ வழிபாடு மற்றும் அனுட்டானங்களைப் பின்பற்றும் எங்கள் பலருக்கும் அக்காலத்தில் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது. சிலநாள் செல்ல எல்லோரும் மன ஆறுதல் அடைந்தனர். அப்படி ஆறுதலடைந்த வேளை சித்தப்பா சொன்னார், குறிப்பிட்ட ஒரு கிரக தசைக் காலத்தில் ஒரு கிரகத்தின் புத்தியில் ஒரு மகள் இறந்தால், மகள் இறந்த வேளையில் தசா நாதனாக இருந்த கிரகம் புத்தி நாதனாகவும், புத்தி நாதனாக இருந்த கிரகம் தசா நாதனாகவும் அமைந்துபோக மகன் மூலம் துன்பம் வந்திருக்கிறது என்றார்.

சித்தப்பா தமிழ் மரபு, சிலம்பின் சிறப்பு என்னும் நூல்களை எழுதியது பலருக்கும் தெரியும். தமிழ் மரபுக்கு மதிப்பு நிறைந்த சில வசனங்களால் பண்டிதமணி கணபதிப்பிள்ளையும் மதிப்புரை வழங்கியிருந்தார்.

இவை மட்டுமன்றி அக்காலத்து க.பொ.த. சாதாரணதர வகுப்புக்குப் பயன்படத்தக்கதாக இந்து சமய பாடத் திரட்டு, சுந்தர காண்டம் காட்சிப் படலம், நிந்தனைப் படலங்களையும் வெளியிட்டதாக எனக்கு ஞாபகம் உண்டு. அவற்றில் இந்து சமய பாடத் திரட்டில் திருவருட்பயனுக்கு மாணவர்க்குப் பயன்படும் முறையில் ஒரு தெளிவுரை எழுதியிருந்தார். அந்த உரை, இக்காலத்துச் சித்தாந்த ஆர்வலர், பிறர் உதவியின்றியே கற்கத்தக்க தன்மை உடையது.

1960க்கு முன்பின்னாக அச்சுக்கூடத்துச் சித்தப்பாவான தி.ச.வரதராசன் (வரதர்) திருக்குறளும் பொழிப்புரையும் என்ற ஒரு நூல் வெளியிட்டார். வெளியீட்டு விழா மிக விமரிசையாக நிகழ்ந்தது தெரியும்.

அந்தப் பொழிப்புரை நூல் முழுமையாகச் சித்தப்பா எழுதியதோ அல்லது அச்சுக்கூட சித்தப்பா எழுத அதைச் சித்தப்பா திருத்தித் தெளிவாக்கினாரோ தெரியவில்லை. 1983களில் அதை நான் தேடியபோது அது கிடைக்கவில்லை. அப்பொழிப்புரையைச் சித்தப்பா எழுதியிருந்தாலும் சரி, திருத்தியிருந்தாலும் சரி அது இந்தக் காலத்துக்கு மிகவும் பிரயோசனமாக இருக்கும். இக்காலத்தில் கிடைக்கும் சில திருக்குறள் தெளிவுரைகளில் திருப்தி ஏற்படாதபோது அதை நினைப்பதுண்டு. அதை முயன்று தேடினால் கிடைக்கும் என்ற நம்பிக்கை உண்டு. கிடைத்தால் பலருக்குப் பயன்படும்.

இவை மட்டுமன்றி சித்தப்பாவின் இனிய நண்பரான இராசநாயகம் மாஸ்டருடன் சேர்ந்து ஒன்பதாம் ஆண்டு மாணவர்க்குப் பயன்படும் வகையில் இன்பத்தமிழ் என ஒரு பாடப் புத்தகமும் எழுதியிருந்தார். அந்தப் புத்தகத்தில் தமிழறிஞர் கி.வா.ஜகந்நாதனின் கட்டுரை ஒன்றும் இடம்பெற்றிருந்தது.

அக் கட்டுரையைப் பதிப்பிக்க கி.வா.ஜ. விடம் சித்தப்பா அனுமதி வேண்டி எழுதிய கடிதத்திற்கு கி.வா.ஜ. எழுதிய பதில்க் கடிதத்தைப் பார்க்கும் வாய்ப்பு எதிர்பாராத விதமாக எனக்கு கிட்டியது. அதில் கட்டுரையைப் பதிப்பிக்க அனுமதி வழங்கியதோடு, அதற்காக ரூபா 25 அனுப்பிவைக்கும்படியும் இருந்தது. இது சாதாரண நடைமுறை என்றாலும் எனக்கு அது நூதனமான செய்தியாக இருந்தது.

சித்தப்பா வித்துவான் பரீட்சை சித்தியெய்தியபின் சிலகாலம் மேலைச் சிவபுரியில் தமிழாசிரியராகக் கடமையாற்றியிருக்கிறார். அக்காலத்தில் தமிழ்நாட்டிலும் மேடைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசில் மதிப்பு அடைந்திருக்கிறார். அதன் விளைவாக 60 ரூபா சன்மானத்தில் வானொலியில் பேசும் வாய்ப்பு சித்தப்பாவுக்குக் கிடைத்திருக்கிறது. இச் செய்தி அவர் தகப்பனான எங்கள் பெத்தப்பா பொன்னுத்துரைக்கும் என் அப்பா தியாகராசாவுக்கும் பேரதிர்ச்சியை உண்டு பண்ணியிருக்கிறது. இப்படியான பெருமையும் வசதியும் கிடைத்தால் சித்தப்பா இந்தியாவிலேயே தங்கிவிடுவார், இலங்கைக்கு வரவே மாட்டார் என அஞ்சியிருக்கின்றனர். இந்த அச்சத்தில் அப்பாவும் பெத்தப்பாவும் சித்தப்பா வானொலியில் அந்தப் பேச்சில் பங்குபற்றாமலே இங்கு வரும்படி அழைத்திருக்கின்றனர். இவர்கள் செயலால் இந்தியாவில் பிரகாசிக்கும் சந்தர்ப்பம் போய் இலங்கையில் பிரகாசிக்கும் நிலை உண்டானது எனலாம்.

சித்தப்பாவின் மேடைப் பேச்சும் எழுதாற்றலும் உலகறிந்த விடயங்கள். சில மாதங்களுக்கு முன் என்னுடைய ஏதோவொரு கட்டுரையைப் பாராட்டிய ஒரு முதியவர், அழகாகக் கட்டுரை எழுதுவது வித்துவானுக்கும் உங்களுக்கும் ஒரு கொடையாக உள்ளது என்றார். அவரது பேச்சாற்றல் எழுத்தாற்றலை அறிந்தவர்கள் இக்காலத்தில் முதியவர்களாகவே இருப்பது வழக்கமாகிவிட்டது. சித்தப்பா விடயத்தில் மட்டுமன்றி, கிருபானந்த வாரியார், கி.வா.ஜகந்நாதன் போன்றவர்களைப் பற்றியே இக்கால இளைஞர்கள் நன்கு அறியாதிருப்பது கவலைக்குரியது.

சித்தப்பாவின் மேடைப் பேச்சின் அழகைப் பலர் பாராட்டியிருக்கிறார்கள். ஈழத்துச் சிவானந்தன் ஈழத்து மேடைப் பேச்சாளர்களைப்பற்றி வெளியிட்டிருந்த நூலில் சித்தப்பாவைப் பேட்டி கண்டும் சித்தப்பாவின் மேடைப் பேச்சை இரசித்தும் சில குறிப்புக்கள் இருந்தன. அந்நூல் இப்போது கிடைக்குமோ தெரியாது.

சித்தப்பாவின் மேடைப் பேச்சுக்களில் மூன்று பேச்சுக்கள் என்னால் மரணப்பரியந்தம் மறக்க இயலாதவையாக உள்ளன.

யாழ் இந்துக் கல்லூரி சேக்கிழார் விழாவில் நடந்த கருத்தரங்கிற்குத் தலைமை தாங்கி உரையாற்றியது ஒன்று.

யாழ் மாநகரசபை மண்டபத்தில் நிகழ்ந்த தமிழ் விழாவில் பல்லவர் கால இலக்கியம் பற்றி உரையாற்றியது ஒன்று.

யாழ் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் கி.வா.ஜகந்நாதனுக்கு நடந்த மணிவிழாப் பாராட்டு விழாவில் உரையாற்றியது ஒன்று.

சித்தப்பாவின் இந்த மூன்று மேடைப் பேச்சுக்களும் மிக உச்சமானவை என்பது என் கணிப்பு என்றால் அவரின் பிற மேடைப் பேச்சுக்களையும் தனித்துவ மரியாதையுடன் கேட்டு மகிழும் பலர் இருந்ததை நான் அறிவேன்.

ஆட்பாலவர்க்கருளும் வண்ணம் என்ற தலைப்பில் இந்துக் கல்லூரியில் கருத்தரங்கிற்குச் சித்தப்பா தலைமை வகித்து உரையாற்றினார். ஆரம்ப உரையில் “ஆட்பாலவர்க்கருளும் வண்ணமும் ஆதிமாண்பும் கேட்பான்புகில் அளவில்லை” என்பது தேவாரம். அளவில்லாத விடயத்தைப்பற்றி கருத்தரங்கில் உரையாற்றுபவர்கள் உரையைக் கேட்போம் என்ற அடிப்படையில் தொடக்கவுரை அமைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் நிறைவுரையில் அத் தேவாரத்தின் பிற்பகுதியில் "கோட்பாலனவும் வினையும் குறுகாமை எந்தை தாட்பால் வணங்கித் தலைநின்று இவைகேட்க" என்றுள்ளது. இதன்படி இவர் உரையினைக் கேட்க முடிந்தது என்றாற்போல நிறைவுரையை நிகழ்த்தியதில் தமிழறிவும் மேடைப் பேச்சைக் கேட்டு மகிழும் அனுபவமும் மிக்க அச்சபை சித்தப்பாவின் தலைமை உரையால் மனநிறைவடைந்தது.

இந்த உரைகளிலும் பார்க்க உச்சமானதாக கி.வா. ஜகந்நாதன் பாராட்டுவிழா உரை அமைந்தது.

திருமுருகாற்றுப்படையில் முருகன் அருளைப் பூரணமாகப் பெறுபவர் முருகனைப் போலவே அருள்புரியும் பெருமையடைவார் என்ற கருத்துண்டு.

கி.வா.ஜகந்நாதன், இவரின் ஆசிரியர் உ.வே.சாமிநாதையர், உ.வே.சாமிநாதையரின் ஆசிரியர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை ஆகிய மூவரும் தமிழ்ப் பாடல்களை இயற்றும் ஆற்றல் கைவந்தவர்கள். மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையின் மாணவப் பரம்பரையில் உள்ளவர் தமிழ்ப் பாடலை இயற்றுவது இயல்பே. அதிசயமல்ல. ஆனால் தங்களைப்போல் அனைவரும் பாடல்களை இயற்றப் பயிற்றுவிப்பது போல மஞ்சரி என்ற பத்திரிகையில் நீங்களும் கவிபாடலாம் என்ற தலைப்பில் யாப்பிலக்கணத்தை கி.வா. ஜகந்நாதன் எழுதியுள்ளார்.

நீங்களும் கவிபாடலாம் என்பது, தமக்குக் குருபரம்பரையாக வந்த புலமையை அனைவருக்கும் வழங்குவது போலுள்ளது. இது, திருமுருகாற்றுப்படை குறிக்கும் முருகன் அருளை பூரணமாகப் பெற்றதன் விளைவு என்ற முறையில் சித்தப்பாவின் பேச்சு அமைந்திருந்தது.

விழாவின் இறுதியில் கி.வா.ஜகந்நாதன் பதிலுரை வழங்குகையில் தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் பலர் என்னைப் பாராட்டிப் பேசியுள்ளார்கள். பொன் முத்துக்குமாரன்போல் சிறப்பாக ஒருவரும் பேசவில்லை. அவர் பொன் பொன்னாக, முத்து முத்தாகப் பேசினார் என்று குறிப்பிட்டார்.

இதே போலக் கம்பன் கழக விழாவிலும் காரைநகர் சிவன் கோவிலில் நிகழும் மணிவாசகர் விழாவிலும் சித்தப்பாவின் பேச்சுக்கள் தனித்தன்மையுடன் வரவேற்கப்பட்டதை அறிவேன் என்றாலும் உறவுமுறை கருதி அப் பேச்சுக்களைப் பிறர் பாராட்டும்போது சேர்ந்து பாராட்ட இயலாமல் இருப்பேன். ஆனால், குறித்த இம் மூன்று சந்தர்ப்பங்களிலும் அப்படியொரு இயலாமை ஏற்பட்டதில்லை.

சித்தப்பாவிற்கு தான் பல்கலைக்கழக கல்வியை நிறைவு செய்து உத்தியோகமானதும் இந்தியாவிலும் இலங்கையிலும் பல இடங்களுக்குச் சென்று பார்க்க வேண்டுமென்ற விருப்பம் இருந்தது. ஆனால் பல்கலைக்கழகக் கல்வி நிறைவுறு முன்னரே திருமணம் நிகழ்ந்ததால் அவ்விருப்பம் நிறைவேறவில்லை. அதேபோல தன் கடைசிப் பிள்ளைக்கும் திருமணம் செய்து குடும்பப் பொறுப்பை நிறைவு செய்தபின் இராமகிருஷ்ண மிஷனிலோ, செல்வச் சன்னதி மடங்களிலோ தங்கி ஆன்மீக சாதனைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற எண்ணமும் இருந்தது. எந்த எண்ணம் முதுமை காரணமான நோயினால் கைகூடவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தப்பா ஓய்வு பெற்றுச் சில நாட்களின் பின் ஒரு தலயாத்திரையை மேற்கொண்டார். அப்போது திருவண்ணாமலை சென்று கிரிவலம் செய்ய ஆரம்பித்திருக்கிறார். உரிய பாதையை விட்டு வேறு வழியில் செல்வதைக் கண்ட ஒருவர் கிரிவலப் பாதை உதுவல்ல இதுவே என்று காண்பித்திருக்கிறார். அதன்பின் தானும் சேர்ந்து கிரிவலம் செய்வதில் சித்தப்பாவுக்கு இடையூறு உண்டா என்று கேட்டிருக்கிறார். சித்தப்பா இல்லை என்றிருக்கிறார். சித்தப்பாவுடன் கிரிவலம் செய்து கிரிவலத்தில் தரிசிக்க வேண்டியதை யெல்லாம் காண்பித்திருக்கிறார். கிரிவலம் முடிந்தவுடன் அந்த அன்பர் சித்தப்பாவை நோக்கி உங்களுக்கு கிரிவலத்தில் உதவ வேண்டும் என மனதில் தோன்றியதால் தான் தானும் கிரிவலம் வந்ததாகக் கூறினாராம். இவ்விடயத்தைக் கூறிய சித்தப்பா புராண சம்பிரதாயத்தில் பார்த்தால் அண்ணாமலையாரே உடன் கிரிவலம் செய்தது போன்ற தன்மை இதில் உள்ளது என்றார்.

சித்தப்பாவுக்கு எங்கள் பிள்ளையாரில் ஈடுபாடு மிக அதிகம். சில காலம் ஒவ்வொரு ஞாயிறும் வந்து கோவில் மண்டபங்களையும் வீதியையும் கூட்டுவார். ஒரு நாள் ஒரு சந்தர்ப்பத்தில் தான் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் படித்த காலத்திலும் மனத்தால் எங்கள் பிள்ளையார் கோவிலைக் கூட்டியதாகச் சொல்லியிருக்கிறார்.

பிள்ளையார் கோவிலுக்கு ஒரு கோபுரம் கட்டவேண்டும் என்ற விருப்பத்தை அவர் வெளியிட்டபோது அவரது தந்தையாரும் தமையனாரும் நீ குடும்பப் பொறுப்புடையவன். கோபுரத்துக்கு இப்போது அவசரமில்லை என்று மறுத்திருக்கிறார்கள். உடனே சித்தப்பா நீங்கள் கோபுரத்துக்குச் சம்மதிக்காவிடில் சுழிபுரத்தில் செட்டியார் பகுதியில் உள்ள சிவன் கோவிலுக்கு மதிலில்லை. சுற்று மதிலைக் கட்டப்போகிறேன் என்று கூறியிருக்கிறார். இப்படி அவர் கூறியதால் தந்தையாரும் தமையனாரும் கோபுரம் கட்டச் சம்மதிக்க, கோபுரத்தின் கீழ்ப்பகுதியை வயிரக் கல்லால் கட்டி நிறைவேற்றியுள்ளார். பின் மேற்பகுதி பொதுப்பணியாக நிறைவேறியுள்ளது.

பிள்ளையாருக்குத் தினமும் பன்னீரால் அபிஷேகம் செய்ய வேண்டும் என்ற விருப்பம் அவருக்கிருந்தது. அதே போல ஒரு நேர பூசையுடன் இருந்ததைத் திருப்திப்படாமல் இரண்டு காலப் பூசையாக்கியவரும் அவரே.

பிரபலமான மிருத்யுஞ்சய மந்திரத்தில் சுகந்திம் என்று வருகிறது. சுகந்திம் என்றால் நல்ல வாசனை உடையவர் என்பதாகும். திருமுருகாற்றுப்படையில் மணம்கமழ் தெய்வத்து இளநலம் காட்டி என்று நக்கீரர் பாடியிருக்கிறார். உமையம்மையின் கூந்தலுக்கு இயற்கை வாசனை இல்லை என்று வாதிட்ட நக்கீரரே தெய்வீகத்துக்கு வாசனையும் உண்டு என்ற கருத்தில் முருகன் காட்சி கொடுப்பதைக் கூறும்போது மணம்கமழ் தெய்வத்து இளநலம் காட்டி என்கிறார். இந்தக் கருத்துக்களின் அடிப்படையிலேயே அபிஷேக முடிவிலே பிள்ளையாருக்கு பன்னீர் அபிஷேகம் செய்யவேண்டும் என்றார். பன்னீர் அபிஷேகம் செய்வது சிரமமும் அதிக செலவும் இல்லாத நற்கருமம் ஆதலால் அவர் கூறிய நாளிலிருந்து பன்னீர் அபிஷேகம் நிகழ்கின்றது.

பண்டிதர் தி.பொன்னம்பலவாணர்
பொன்னாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1958ல் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் சுழிபுரம் வீட்டுக்கு வந்தபோது வரவேற்புரை



முன் வரிசையில் பொன்.முத்துக்குமாரன் அவர்கள் வாரியாரின் உரையைக் கேட்டு மகிழ்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்பிற்குரிய சின்னமாமா

"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து" – திருக்குறள்

இது எனது ஆட்டோகிராஃபில் சின்னமாமா தமது கையால் எழுதியது. இதன் பொருள் நாம் எண்ணுவது சிந்திப்பது அனைத்தும் உயர்வானதாக இருக்கவேண்டும். எமது எண்ணம் கைகூடாதவிடத்தும் எமது உயர்வான எண்ணங்களை நீர்த்துப் போகாமல் காக்கவேண்டும்.

இதை அவர் எழுதியது மட்டுமல்லாமல் தன் வாழ்க்கையிலும் கடைப்பிடித்து வந்தார்.

மாமா என்ற ஒரு சொல் கேட்கும்போதெல்லாம் ஒரு பயம், ஒரு மரியாதை, ஒரு நம்பிக்கை, ஒரு ஆதரவு இப்படிப் பல்வேறு பண்புகளையுடைய ஒரு தோற்றம் கண்முன் தோன்றும்.

மாமாவைப் பொறுத்தவரையில் உறவு முறைகளிலும் சரி, பல்வேறு பதவிகளிலும் சரி தனக்கென உள்ள கடமைகளை அதற்குரிய ஒழுங்குமுறையை செவ்வனே நிறைவேற்றியிருந்தார்.

நான் சிறுவயதினனாக இருக்கும்போது என் தந்தையார் இறந்துவிட்டார். தாய்மாமன் என்ற பொறுப்பை முழுமையாக ஏற்று என்னைத் தன்னுடன் அழைத்து வைத்திருந்து கல்வி கற்க வழி செய்தார்.

மேலும் நாம் எப்படி வாழ வேண்டும் என ஒவ்வொரு நிலைகளிலும் வழிகாட்டியது மட்டுமல்லாமல் தானும் வாழ்ந்து காட்டினார். இன்று எனக்குக் கிடைக்கும் நற்பெயருக்கு காரணமாயினார்.

"புண்ணியங்கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்" என்ற பாரதியாரின் பாட்டுக்கு இணங்க எவராக இருப்பினும் கல்வி கற்பதற்குத் தன்னால் இயன்ற உதவிகளை செய்வார். பலர் அவருடன் இருந்து அந்த வாய்ப்பினைப் பெற்றனர். இதனால் அவர் சிக்கனமாக வாழவேண்டி இருந்தது. எவ்வாறாயினும் எவருக்கும் கல்வி கற்க தானாக உதவும் உயர்ந்த பண்பினை அவர் இலட்சியமாகக் கொண்டிருந்தார். யாவருக்கும் அவ் வீடு அறிவாலயமாக இருந்தது. யாவரும் கல்வி கற்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவது மட்டுமல்லாமல் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவற்றை உணர்த்தி நல்ல மனிதனாக வாழவேண்டும் என்ற பண்பையும் வளர்த்தார். காலத்தின் பெறுமதியை நன்கு உணர்த்துவார். அவர் வீட்டில் நேரத்தின் பயன்பாடு மேலோங்கி இருக்கப் பழக்கியிருந்தார். வீண் பொழுதுகளுக்கு அங்கு இடமில்லை. தவறுகள் விட வாய்ப்பே இல்லை. எல்லாவற்றுக்கும் மேலாக வயதான காலத்திலும் அவர் வீண் பொழுது போக்காததுடன் அறிவுசார்ந்த புதிய தேடல்களைத் தேடித் தேடி அறிந்தார். இதனால் நடைமுறையுடன் சார்ந்த பண்பட்ட கல்விமானாக விளங்கினார். தனக்குத் தெரியாத விடயங்களின் போது தெரிந்தவர் கூறுவதை ஏற்றுக்கொள்ளும், விட்டுக்கொடுக்கும் மனப்பக்குவதைப் பெற்றிருந்தார். மற்றவர்களை மதித்து வந்தார். இவ்வாறு அவர் மேலும் தன்னை உயர்த்திக்கொண்டார். இதனால் உறவினரிடத்திலும் மற்றையோரிடத்திலும் நல்ல மனிதனாகவும் கல்வி மானாகவும் கணிக்கப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் குடும்ப உறவுகளை மதிக்கும், பேணும் தன்மையைக் கொண்டிருந்தார். அவர் தன் அண்ணா, தங்கை இருவரிடத்திலும் பாசத்துடனான நல்ல உறவை வளர்த்துவந்தார். சகோதரர்களிடத்தில் மதித்தல், விட்டுக்கொடுத்தல் உதவி செய்தல் போன்றவற்றைப் பேணி நெகிழ்ச்சித் தன்மையுடன் வாழ்ந்தார். என் அம்மாவுக்கு என்றும் விரும்பும் சின்னண்ணாவாகவே இருந்தார்.

யாவருக்கும் அறிவு, அனுபவம் போன்றவற்றைக் கூறிவந்த அவர் காலத்திற்கு ஏற்ப தன்னை மாற்றவும் பழகிக்கொண்டார். பிள்ளைகள் மருமக்கள் யாவரினதும் சரியான கருத்துக்களை ஏற்றுக்கொள்ளும் தன்மை, தன்னை மாற்றிக்கொள்ளும் தன்மை ஆகிய பண்புகளையும் வளர்த்துக்கொண்டார். இது அவரது தெளிந்த மனப்பக்குவதைக் காட்டுகிறது.


தவிர, எனக்குப் பாடசாலையில் அவரிடம் கல்வி கற்கும் வாய்ப்பும் கிடைத்தது. நான் மாணவனாக, ஆசிரியராக, அதிபராக கடமையாற்றிய காலத்தில் அவரின் ஆசிரியப்பணியின் சிறப்பை வேறு எவரிலும் காண முடியவில்லை. கற்பிக்கும் ஆற்றல், பாட அறிவு, மாணவர்களுடன் பழகும் முறை (கண்டிப்பு, ஆதரவு) எடுத்த விடயத்தை நிறைவேற்றும் விதம், முதல் நாள் கல்வி கற்றதை மாணவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளாமல் தானே ஞாபகமாக விட்ட அதே இடத்தில் இருந்து தொடங்கிக் கற்பித்தல், நேரம் தவறாமை, லீவு எடுக்காமை தூய்மையான உடை, தோற்றம், இப்படி ஆசிரியருக்குரிய முழுப் பண்புகளையும் கொண்டிருந்தார். வகுப்பில் என்னை ஒரு மாணவனாகவே பார்ப்பார். நான் மருமகன் என்ற சலுகைக்கு இடமில்லை. அவர் எனக்காக வேறு ஆசிரியர்களிடமிருந்தும் சலுகை எதிர்பார்க்கவில்லை. ஏனைய மாணவர்களைப் போலவே என்னை சமமாக நடத்தினார். சுய முயற்சியால் முன்னேறு, நேர்மையாக இரு என்பதே இதன் பொருள். இத்தன்மையினால் மாணவர்களும், ஏனையோரும் அவரைப் பெரிதும் மதித்தனர்.

இவர் மிகுந்த கடவுள் பக்தியுடையவர். தினமும் அதிகாலையில் எழுந்து கடவுளை வழிபடுவார். தினமும் காலையிலும் மாலையிலும் நல்லூர் முருகனிடம் செல்வார். அங்கு முருகனை வழிபடுவது மட்டுமில்லாமல் கோவிலை தினமும் சுத்தம் செய்வார். எந்தப் பெரியவராயினும் நிமிர்ந்து பார்க்காது தமது பணியைச் செய்வார். தினமும் கோவிலுக்கு நடந்தே போவார். எப்போதும் நேரம் தவறாமல் செல்லும் பழக்கம் உடையவர். இதனால் இவரைத் தெருவில் கண்டவுடன் தற்போது எத்தனை மணி என்பதை உணர்ந்ததாகக் கூறுவார்கள். தேவையற்ற விடயங்களில் கவனம் செலுத்த மாட்டார்.


தனது மனதின் தான் சார்ந்த எதிர்பார்ப்புகளையும், தன் மனது சார்ந்த உணர்வுகளையும் தன்னுள்ளேயே வைத்திருக்கப் பழகியிருந்தார். எதனையும் வெளிக்காட்டாது நடப்பவற்றை ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தை வளர்த்தார். அவரது ஒவ்வொரு செய்கையிலும் பிறருக்குத் தீங்கு செயாத ஓர் அர்த்தம் இருந்தது. ஒரு முன் உதாரணமாக வாழ்ந்தார். அவரைப்போல் நாமும் வாழவேண்டும் என்ற மனப்பாங்கு நம் எல்லோரிடமும் மேலோங்கி இருந்தது. அவ்வளவு சிறப்பு அவர் வாழ்வுமுறையில் இருந்தது. அவருடன் வாழக் கிடைத்தது நான் செய்த அதிர்ஷ்டம் என்றே எனக்குத் தோன்றுகின்றது.

மருமகன் சி. சிவகணேசசுந்தரம்
முன்னாள் அதிபர், வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1952ல் இந்தியாவில் **B.O.L.** படித்துக்கொண்டிருந்தபோது தங்கை, கணவர் பிள்ளைகளுடன்...



1966ல் கோலாலம்பூர் சென்றபோது தாய் மாமானுடன்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னென்னும் பொக்கிஷம்

அண்டை வீட்டுத் தாத்தா
பெரும் பொக்கிஷம் என் தாத்தா

பொன்னாம் முத்தாம் இரண்டும் சேர் குமாரனாம்
பெயர்போல மின்னிய பேரறிஞர்

கண்ணும் கருத்தும் கண்டிப்பும்
கவரும் நேர் நன் நடையும்

தண்மை நிறைந்த பேச்சாளர்
தவறியும் தவறா தன் மானஸ்தர்

பொன்னும் புகழும் நாடாதவர்
புலவர் அவர் பொன் முத்துக்குமாரன்

விண்ணும் மெச்சும் வெகு சீராளன்
கண்ணியம் சார் கல்விமான்

புண்ணியம் நிறையச் செய்தவர்; பாட்டி
மகேஸ்வரி என்னும் இல்லாளை அமையப் பெற்றவர்;

எண்ணி நான் வியக்கும் எங்கள்
இனிய அண்டை வீட்டுத் தாத்தா

திருமதி காஞ்சனா செந்தூரன்
மெல்போர்ன் அவுஸ்திரேலியா
(செல்வி காஞ்சனா செல்வரத்தினம்
58 பிரவுன் வீதி
நீராவியடி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவர்...

**பொன்**
அவரது ஊரின் பெயரில் இருந்தது
அவர் தகப்பன் பெயரில் இருந்தது
அவரது மேனி நிறத்தில் இருந்தது!

**முத்து**
அவர் பெயரில் இருந்தது
அவரது சொத்தில் இல்லாவிட்டாலும்
அவரது சொல்லில் இருந்தது!

சிவபூசை தினம் செய்பவர் குமாரனாயிருந்தும்
சிவ**குமாரன்** முருகனைப் பூசித்தார் –
சிவா என்னை நேசித்தார்!

எனக்கு வியர்த்தால் – துடைத்தார்
எனக்குக் குளிர்ந்தால் – போர்த்தார்
நான் களைத்தால் – களைப்பாற்றினார்
கவலையால் சோர்ந்தால் எனைத் தேற்றினார்

ஒரு ஆளாக – நானாக வளர்ந்தாலும்
வாழ்வு பாழாக – வீணாக வளராமல்
அர்த்தமுள்ள ஒரு ஆணாக வளர்த்தார்
இவர் என் தாத்தா!

காலை எழுந்து
கால் கழுவி, கை கழுவி
மெய் கழுவி, பொய் கழுவி
கிழக்கு வெளுக்கப் பிந்தினாலும் – மின்சூள்
விளக்கு பூக்களின் இடத்தை விளக்க
பனிப் பெய்து குளித்திருக்கும்
மலர் கொய்து
மனதில் அலையும் மற்ற சிந்தனைகளைக்
கைது செய்து
கந்தனை வந்தனை செய்வார்!
பாயில் நோய் வந்து படுக்கும் வரை
கோயில் போய் வந்து கொண்டிருந்தார்
தோலைப் போர்த்த மேலணி அணிவார் –
எனினும்
காலைப் போர்த்த காலணி அணியார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் நடக்கும் போது
மெய், வாய், கண், மூக்கு, காது
முதலிய புலன்கள் பிசங்காது
கால் மிதித்து ஏதுவும் நசுங்காது
காகிதமாயினும் அது கசங்காது

பிறவிப் பிணிக்கு பரிகாரம் தேடி
குமரன் பணிக்கு கோயில் பிரகாரம் நாடி
புறமும் உள்ளும் வலம் வருவாராம்
திருப்புகழ், தேவாரம் தினமும் பாடித் தொழுவாராம்!
அவர் எடுத்துச் செல்லும் உழவாரம் கொண்டு
அடியார்களின் – பொன்னான
அடிகள் புண்ணாகாமல்
கல்லில் அடிபடாமல்
முள்ளில் மிதிபடாமல்
சிரமதானம் செய்வார்
பரமகுருவுக்குப் புஷ்பமும் கொய்வார்!

வீடுபெற – தான் இருக்கும்
வீட்டை விட்டு – ஆறுபடை
வீடு கொண்டவன் கோயில் சென்றாலும்
வீடு வந்ததும், வேலைகளில் இருந்து
விடுபட்டு இருந்ததில்லை
ஆறுமுகனைக் கண்டு வந்ததும்
ஆறி இருப்பாரே தவிர – வேலை எதையும்
ஆறப் போட்டதில்லை!
காலையில் இருந்து
மாலை வரை – கந்தன்
காலைத் தொழுவார் – அவன் கை
வேலை வணங்குவதோடு – வீட்டு
வேலை செய்யவும் இணங்குவார்!

அளவு பார்த்து
வளவு சுத்தம் செய்து
பயன்படும் மரங்கள் நட்டு – அதற்கு
பலன் தரும் உரங்கள் இட்டு
அவற்றிற்குத் தண்ணீர் வார்ப்பார்
அல்லும் பகலும் காவல் காப்பார் – தான்
இருக்கும் வரை அவை கனிதராது என்றாலும்
இருக்கும்வரை செய்பவைதான் – இனி
பிறக்கப் போகிறவர்க்கும் – சிலவேளை தன்னை
மறக்கப் போகிறவர்க்கும் பயன் தரும் என்பார்!
ஓய்வான நேரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாய்வான கதிரையில் இருந்து
ஏதாவது வாசித்திருப்பார் – அல்லது
வாசித்ததுபற்றி யோசித்திருப்பார்!
அன்னை மொழியில் அதிக அக்கறை – அத்தோடு
அந்நிய மொழி என்று ஆங்கிலம் வாசிக்க
அந்நியப்பட்டு நின்றதில்லை
அறிவு எங்கெல்லாம் செறிவாகக் கிடைக்கின்றதோ அதுவே
குறியாக சத்தான
பத்திரிகைகள், புத்தகங்களுக்குள்
முத்துக் குளிப்பார்
வித்துவானவர் மேலும் வித்துவம் தேடுவார்!

என் தாய் வழித் தாத்தா
எனக்குத் தாய்மொழி தானம் செய்தார்
ஆங்கில அறிவை அள்ளித் தந்தார்!
இங்கிதமும் இனிதாக சொல்லித் தந்தார்!
விஞ்ஞானத்தில் அக்கறை காட்டியதோடு
மெய்ஞானத்தில் அக்கறையையும் காட்டினார்!
கணிதத்தில் கவனம் செலுத்தச் சொல்வார்
புனிதம் உள்ளும் புறமும் வேண்டும் என்பார்
விளையாட்டுச் சொல்லித் தராவிட்டாலும்
விளையாட்டின் நன்மை தீமை விளக்கினார்
அவரோடு எனக்கு முன்னமே பழகியோர்
அவரைப் பற்றிச் சொல்லக் கேட்டுள்ளேன்
ஆத்திரப்படுவார் என்றார்கள்
அமைதியானவரையே நான் கண்டேன்!
கற்பித்தார் என்றார்கள்
கற்பதில் ஆர்வம் உள்ளவரையே கண்டேன்
பேச நன்றாகத் தெரியும் என்றார்கள்
பேசாமல் இருக்கத் தெரிந்தவரையே கண்டேன்
உறவுகளுடன் வாழ்ந்து கொண்டு எப்படி
துறவறம் கொள்வது என்று தெரிந்து கொண்டேன்
நிறைகுடம் தழும்பாதது எப்படி என்று
நேரில் கண்டு அறிந்து கொண்டேன்

வாழும் உதாரணமாக இருந்து
தாத்தா எனக்குக் கற்பித்தவை
தன்னடக்கம்
நாவடக்கம்
மற்றவர் பேசிக் கொண்டிருக்கையில் குறுக்கிடாமை
சில கேள்விகளுக்கு மௌனமே சிறந்த பதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில விமர்சனங்களுக்கு புன்னகையே மறுமொழி
படுக்கை விரிப்பு கலையாது உறங்குவது எப்படி?
பாடசாலை நாளோ இல்லையோ
வேலை நாளோ விடுமுறையோ
விடிகாலையில் விழிப்பது எப்படி?
எதையும் நேர அட்டவணைப்படி செய்வது எப்படி?
அவதானம், கிரகிப்பு என்பவற்றின் முக்கியம்
எமது உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் முறை
ஏற்படுத்தும் தாக்கம்
பண்பு...... நாகரீகம்...... பழக்கவழக்கம்.....
மிருகத்திடம் இல்லாத ஆறாவது அறிவை
மனிதன் எப்படிப் பயன்படுத்துவது?
பருவத்தே பயிர் செய்வதன் பயன்
இளமையில் கற்பதன் அருமை
இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்வது எவ்வளவு நல்லது
முக்கியமாக
கோபம் குல நாசம் செய்யும் என்பது!
என்னை
பார் புகழும் பார்த்திபனாய் ஆக்கி
பார்க்கவேண்டும் என நினைத்தார் – என்னை
யார் புகழ்கிறார்களோ தெரியாது – நான்
அர்ச்சுனன் ஆகாவிட்டாலும் – மனதில்
அர்ச்சனை செய்யும் அவர் ஒரு பீஷ்மர்!

ஏணையிலே என்னை உறங்கவிட்டு
எலியென்று எண்ணி பூனை வந்து
என் காலைக் கவ்வாது காத்திருந்தார்
என்னருகே உறங்காமல் உறங்கினார்!
என்னை வளமான எதிர்கால
ஏணியிலே ஏற்றிவிட என்னுடன் தன்
காலத்தைக் கழித்தார் களித்தார்!
அவருடன் இருக்கும் பொன்னான
காலத்தைக் கூட்ட நினைத்தேன்
காலன் அவரைப் பறித்துவிட்டான் – ஏதோ
காரணமாய் என்னிடமிருந்து பிரித்து விட்டான்
கனல் வந்து கண்ணானவரைக் கருக்கிவிட்டான்
புனல் போலக் கண்ணீரைப் பெருக்கிவிட்டான்!

பேரன்
வை. சிவபிரகாஷ், கட்டார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் முனிவர்

பொன் முத்துக் குமர! தென்றல்
போல்மொழி பேச வல்ல
இன்முத்துக் குமர கல்விக்
கென வந்து வாய்த்த ஐய!
நன்முத்துக் குமர! பாடம்
நயம்பெற உரைத்தாய் சங்கத்
தொன்முத்துக் குவியல் யாவும்
சுவை படத் தந்தாய் சென்றாய்

பேசினாய் தமிழை உள்ளம்
பிணித்திட வைத்தாய் தீய
கூசினாய் நன்றே செய்தாய்
கொள்கையின் வழியே நின்றாய்
வீசினாய் பேர்பு கழ்வீண்
ஆணவன் கந்தனுக்கே
தாசனாய் ஆனாய் அஃதே
சரியென நின்றாய் வாழ்க

நெற்றியில் நீறு தோன்றும்
நெஞ்சினில் அன்பு தோன்றும்
பற்றிலாச் செய்கை தோன்றும்
பயனுள வார்த்தை தோன்றும்
கற்றவர் மனதில் தோன்றும்
கந்தனே கருத்தில் தோன்றும்
முற்றிலும் முனிவ னாகிப்
பொற்பதம் பணிந்தாய் வாழ்க

தமிழினை உண்ட பேர்கள்
சாவதே இல்லை ஐயா
தமிழினைத் தந்த பேரும்
தரணியில் மறைவ தில்லை
தமிழ்வடி வாகி வந்தாய்
தமிழ்வளம் பெறநீ வாழ்ந்தாய்
தமிழுள வரைக்கு வாழ்வாய்
தமிழ்ப் பெரியோனே வாழ்க

காரை செ. சுந்தரம்பிள்ளை

*டிசெம்பர் 1989ல் திரு பொன்.முத்துக்குமாரன் அவர்களின் நினைவு மலரில் வெளிவந்தது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கண்ட தமிழ்ப் பெரியார்

நான் அறிந்த பேரறிஞர். தமிழ் படித்த பெரியோர்களில் நான் பேசிப் பழகிய பெரியார் திரு.பொன்.முத்துக்குமாரன் ஆவார். என் தந்தையாரைவிட பன்னிரெண்டு வயது இளையவர். என் பெரு மதிப்புக்குரிய அப்பெரியார் எங்கள் எதிர்வீட்டில் வசிக்கப் போகிறார் என்றவுடன் நாங்கள் எல்லோரும் பெருமகிழ்ச்சியடைந்தோம்.

அவரது கல்வியும் ஓழுக்கமும் பண்பும் நாம் கேள்விப்பட்டவையே. எதிர்வீட்டில் வசிக்க வந்தபின்னர்தான் அவருடன் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. என் கணவர் யாழ்ப்பாணம் போனால் அவருடன் பேசி அளவளாவாமல் கொழும்பு திரும்பமாட்டார்.

அவரைச் சம்பந்தியாக அடையக் கொடுத்து வைத்திருக்க வேண்டுமென்று என் கணவர் சொல்லுவார். எனக்கோ அவருடன் பேசவே தயக்கம். அவரது படிப்பும் பண்பும் பக்தியும் தன்னடக்கமும் என் நாவைக் கட்டிப்போட்டுவிடும்.

நான் அவருடன் பழகத் தொடங்கிய காலத்தில் அவர் மேடைப் பேச்சுக்களை நிறுத்திக் கொண்டார். ஆனால் அவருடைய பேச்சுத் திறமைகளைப்பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவரது பிரசங்கம் கேட்க நாங்கள் கொடுத்து வைக்கவில்லை என்று பேசிக் கொள்வோம்.

1983ஆம் ஆண்டு இனக்கலவரத்தில் கணவரையும் மகனையும் ஒருங்கே இழந்து நான் தவித்தபோது, தன் வீட்டுக்கு அழைத்து அங்கு தங்கவைத்து அவர் எனக்குச் சொன்ன ஆறுதல் மொழிகளை நான் என்றென்றும் நினைவு கூருவேன். யாக்கை நிலையாமை பற்றியும், அகிம்சை பற்றியும் மகாத்மா காந்தியின் அறிவுரைகளை யெல்லாம் சொன்னார். தெரிந்தவைகள் கூட அவர் வாயால் வரும்பொழுது எவ்வளவு அழகாக மனதிற்படிந்து ஆறுதல் அளித்தன. அவர் உதவியால்தான் நான் பைத்தியம் பிடிக்காமல் மனத்திடத்துடன் இருந்தேன்.

இங்கு சிட்னியில்கூட ஒரு அன்பர் “அவர் இராமாயணத்துக்கு விளக்கம் சொல்லுவார். எவ்வளவு அருமையாக இருக்கும். நான் அவர் வகுப்பு நடத்தும் பொழுது மறைந்து நின்று கேட்பேன்” என்று சொன்னார்.

அந்த அறிஞரைப்பற்றி “பாற்கடல் உற்றொரு பூனை நக்கு புக்கென” நான் எழுத முடியுமா? அவரது மறைவு தமிழுலகுக்கு ஒரு மாபெரும் நட்டமெனக்கூறி முடிக்கிறேன்.

திருமதி. யாழ்மொழி சண்முகராஜா
சிட்னி, அவுஸ்திரேலியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1968ல் இருந்து வாழ்ந்த வீடு



1989ல் பேத்திக்கு ஏடு தொடக்கிய போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னார் ஊரான் பொன்னான் பெயரன் பொன்னார் மேனியன்

"அன்பொப் புரவு கண்ணோட்டம்
அழியா வாய்மை நாணாதி
இன்பம் பெருக்கு நற்குணங்கள்
எல்லாம் நிறைந்த சான்றோர்கள்
துன்புற்றவர்க்கும் இனியனவே
சூழ்வர துணையின் வினைமுடிப்பர்
வன்பிற் றளரார் நட்டார்க்கும்
அடங்கித் தோற்ற நாணாரே"

விநாயக புராண முடையார் கூறியாங்கு இவர் பெருமை பெரிதேயாகும். இவரை நினைக்கும்போது நித்தமணாளர், நிரம்பவழகியர், சித்தம் இனியவர், செந்தமிழ் வளர்த்தவர், மெத்தப்பெரியவர், பக்திமிக்கவர், மெதுவாகப் பேசுபவர், பேசாமலே கருமம் செய்பவர், வித்தை வல்லவர், மிகுவிநயமுள்ளவர் என்பர். இத்தகைய பெரியவரை இவர் எழுபது காணுமுன் எருமைக்கடாவூர்தி மேலுலகத்தில் தமிழ் விழாவுக்கு அழைத்துப் போயினன்.

பொன்.முத்துக்குமாரன் வித்துவான், **B.O.L.** என்னும் ஓரியன்ரல் லேணிங் பட்டதாரி. அண்ணாமலையில் பெரியவர்களிடம் நான்காண்டுகளும் பின் ஈராண்டுகளும் படித்தவர். பெரிய இடங்களில் பாடஞ் சொன்னவர், பெரியவர்கள் மத்தியில் ஆராய்ச்சித் தமிழ் பேசியவர். பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் விரிவுரை செய்தவர்.

நூல்களுக்கு உரை கண்டவர். திருக்குறளுக்குப் பொழிப்புரை செய்தவர். தமிழ்மரபுக்கு வேலி கட்டியவர். சிலம்பின் செய்தி தந்தவர். மலேசியாவில் உலகத்தமிழாராய்ச்சி மாநாடு கண்டவர். முத்தமிழ் முழங்கி மீண்டவர். ஓய்வு பெற்றும் ஓயாமல் சரியைத் தொண்டு செய்து வழிகாட்டியவர். இவருடைய சேவை எமக்குத் தேவை. இவர் மீண்டு வந்து சேவையைத் தொடரவேண்டும்.

பண்டிதர் க.சி.குலரத்தினம்

*டிசெம்பர் 1989ல் திரு பொன்.முத்துக்குமாரன் அவர்களின் நினைவு மலரில் வெளிவந்தது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாத்தா

தாத்தாவைப் பார்த்த போதெல்லாம் "குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்" என்ற அப்பர் சுவாமிகளின் தேவாரமே ஞாபகத்துக்கு வரும்.

நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும் வேட்டியுடன் கூடிய நஷனலுடன் புன் முறுவலுடன் தாத்தா எப்போதும் காணப்படுவார். மற்றவர்களின் மனது நோகாமல் இனிமையாகப் பேசுவார்.

யாழ்ப்பாணத்திலிருந்து காரைநகருக்குப் போகும்வழியில் 16 கிலோமீற்றர் தூரத்தில்தான் சுழிபுரம் இருக்கின்றது. ஊரில் நான் குளப்படி என்பதால் பாடசாலை விடுமுறை நாட்களில் அப்பா என்னைத் தாத்தா (அம்மாவின் அப்பா) வீட்டில் விட்டுவிடுவார். யாழ்ப்பாணம் போவதென்றால் நாங்கள் பஸ்ஸில்தான் போகவேண்டும். நான் பஸ்ஸில் நடந்த விஷயங்களையும் அந்த பஸ்ஸில் எழுதியிருந்த வாசகங்களை ஆட்கள் மாற்றி எழுதிய விதத்தையும் தணிக்கை இல்லாமல் சொன்னதைக் கேட்டுத் தாத்தா சிரிப்பார். அண்ணா அப்போது தாத்தாவின் வீட்டில் இருந்து படித்துவந்தார். அவருடன் அருளும் (என் பெரிய தாத்தாவின் மகன்) படித்துவந்தார். அவர்களுக்கு அங்கு கட்டுப்பாடாக இருந்து பழகிவிட்டது. ஆனால் ஊரில் (சுழிபுரத்தில்) எந்தவிதக் கட்டுப்பாடும் இல்லாமல் தனிக்காட்டு ராஜாவாக இருந்த எனக்கு மிகுந்த கட்டுப்பாட்டைப் போட்டது என்னை என்னவோ செய்தது. ஒவ்வொரு ஞாயிறும் தாத்தா கொண்டுவரும் ஆங்கிலப் பேப்பரை அவருக்கு வாசித்துக்காட்ட வேண்டும். நான் வீட்டில் மதியம் சாப்பிடுவதற்கு கள்ளம் என்பதால் எல்லோரும் சாப்பிட்ட பிறகுதான் சாப்பிடுவேன். சரியாகச் சாப்பிடுவதில்லை. எனவே தாத்தா எனக்கு கண்டிப்பான உத்தரவு போட்டார். அது என்னவென்றால் மதியம் சாப்பிடும்போது தாத்தாவுக்கு முன்னால் இருந்து சப்பாணம் இட்டு அமர்ந்து சாப்பிடவேண்டும். சாப்பிடும்போது கதைக்கக்கூடாது (அந்தக்காலத்தில் வீடுகளில் கீழே பாய் அல்லது பலகைகளில் சப்பாணம் இட்டே சாப்பிடுவது வழக்கமாகும். தற்போது நவீன உலகில் அவ்வாறு வீடுகளில் உண்பது அருகிவிட்டது).

அவரின் இன்னொரு கட்டுப்பாடாக இருந்தது புத்தக அலுமாரிகளில் இருக்கும் புத்தகங்களை தாத்தாவிடம் கேட்டே வாசிக்கலாம். ஆங்கிலப் பத்திரிகையைத் தாத்தாவின் முன்னால் பிழைவிடாது வாசித்துக்காட்ட வேண்டும் என்பதற்காகவே நான் ஆங்கிலத்தில் அதிக அக்கறை எடுத்துக் கொண்டேன். எனது பள்ளிக்கூடத்தில் (விக்ரோரியாக் கல்லூரி) அந்தக்காலத்தில் பறங்கி இன ஆசிரியர்கள் மிகுந்த சிரத்தையாக எமக்கு ஆங்கிலத்தை கற்பித்ததோடு மட்டுமல்லாது எம்மை ஏனைய பாடசாலைகளுடனான ஆங்கில மொழிப் போட்டிகளுக்கும் தயார்ப்படுத்தி இருந்தார்கள். நான் ஆங்கிலப் போட்டிகளில் அதிகமானவைகளில் தெரிவாகி யிருந்தேன். இதற்குக் காரணம் தாத்தா ஆங்கில வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவித்தமையே ஆகும். வாசிப்புப் பழக்கத்தை என்னில் தொற்றவைத்து என்னைப் புத்தகப் பிரியனாக மாற்றியமைக்கு தாத்தாவின் உந்து சக்தியும் ஒரு காரணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாத்தா வீட்டில் அதிகமான புத்தக சேகரிப்புகள் அலுமாரிகளில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. எனக்கு இந்தப் புத்தகங்களை வாசிக்க மிகவும் விருப்பமாக இருந்தது. அலுமாரிகளில் இருக்கும் புத்தகங்களை வாசிப்பதாயின் தாத்தா தன்னிடம் சொல்லிவிட்டே எடுக்கவேண்டும் என்று சொல்வார். நான் வாசித்துவிட்டு அலுமாரியில் வைத்த பின்னர் தாத்தா என்னிடம் அந்தப் புத்தகம் பற்றிக் கேட்டபார். நான் அந்தப் புத்தகத்தைப்பற்றிச் சிறு விளக்கம் சொல்லவேண்டும். முதலில் தன்னிடம் கேட்டுப் புத்தகம் வாசிக்கச் சொல்லி அனுமதி தந்தவர், பின்னர் அம்மம்மாவிடம் சொல்லிவிட்டு வாசிக்கச் சொன்னார். இருப்பினும் குமுதம், ஆனந்தவிகடன் வாசிக்க அனுமதியில்லை. (இப்படி குமுதம், ஆனந்தவிகடன் வாசிக்கவேண்டாம் என்று அவர் கூறியதற்குக் காரணம் இந்தப் புத்தகங்களில் பல நல்ல விடயங்கள் இருந்தாலும் இளம் வயதினரைத் திசை திருப்பக்கூடிய விடயங்களும் இருந்தமையால் இந்தப் புத்தகங்களை வாசித்துக் கெட்டுப்போகக் கூடாது என்பதனாலாகும்). இவ்வாறு ஒவ்வொருவரிலும் தனிப்பட்ட அவரின் கண்டிப்பும் அக்கறையும் எங்களது முன்னேற்றத்திற்குக் காரணமாக இருந்திருக்கிறது. “இளமையிற் கல்வி சிலையில் எழுத்து” என்பதுபோல முன்னர் வாசித்ததும் ஆங்கில அறிவும் பின்னாளில் நான் ஊடகத்துறையில் (Lake House) பணிபுரியும்போது மிகுந்த உதவியாக இருந்ததுடன் இலக்கியத்தில் நாட்டம் வரவும் காரணமாக இருந்தது.

முதலில் தாத்தாவைக் கண்டு பயந்த நான் பிறகு அவரின் ஒவ்வொரு செய்கைகளையும் மிகுந்த ஆவலோடு பார்க்கத் தொடங்கினேன். அவரை இரசிக்கத் தொடங்கினேன். நான் பெரியவனாகிய பின்பு தற்போதும் பொதுவான விடயங்களைப் பார்க்கும்போது சில விடயங்களில் தாத்தா முன்னுதாரணமாக இருந்திருக்கிறார். எனக்கு அவற்றை நினைத்துப் பார்க்கும்போது இப்போதும் பிரமிப்புத்தான்.

தாத்தாவிடம் அதிகப்பேர் தங்களுக்கு இருக்கும் சந்தேகங்களைக் கேட்பதற்காக வருவார்கள். அவர்கள் கேட்கும் எல்லா விதமான சந்தேகங்களுக்கும் நிதானமாகவும் தெளிவாகவும் விளக்கமாகவும் விடை சொல்வார். தாத்தா முன்னர் கதாப்பிரசங்கம், மேடைப்பேச்சு செய்யப்போவாராம். அவர் ஒரு விடயம் பேசும்போது அதற்கு துணையாக பல கிளை விடயங்களையும் பேசுவாராம். அப்படி உரையாற்றும்போது பிரதான பேச்சிலிருந்து விலகிப் பேசினாலும் எதில் நிறுத்திப் பேசினாரோ மீண்டும் அதே இடத்துக்கு வந்து பேச்சைத் தொடரும் திறமை அவரிடம் இருந்ததாக என் அப்பாவின் அம்மா சொல்லியிருக்கிறார்கள்.

அத்துடன் அவர் ஒரு சிக்கலான விடயத்தையும் சரியான முறையில் புரிந்துகொண்டு அதை எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் விதமாகத் தீர்வைச் சொல்வது அவருக்குக் கைவந்த கலை. இதற்கு உதாரணமாக, இவரின் தந்தையும் தமையனும் தமக்குத் தேவையான விறகுகளைக் காட்டில் சென்று வெட்டிக் கொண்டும் மாட்டுக்கு புல் கொண்டு வருவதும் வழக்கம். இவ்வாறு ஒருமுறை சென்று புல்லுச் செருக்கும் பொழுது ஊரவர்கள் அவர்களுக்கு எதிராக கிராமத் தலைவரிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைப்பாடு செய்துவிட்டார்கள். அவரும் இவர்களை விசாரித்து இவர்களுக்குத் தண்டனை கொடுக்க வேண்டுமென்று முடிவாகிற்று. அப்போது தாத்தா இந்தியாவில் படிப்பை முடித்துவிட்டு வந்திருந்தார். அவர் இந்த வழக்கைக் கேள்விப்பட்டு சென்று பார்த்திருக்கிறார். உடனே எல்லோருடைய வாதப் பிரதிவாதங்களைக் கேட்ட பின்பு நான் எனது கருத்தைக் கூறலாமா? என்று ஆரம்பித்தார். அவர்களும் உடனே தாத்தாவைப் பேச அனுமதித்தனர். அப்போது அவர் மரங்களின் கிளைகளை வெட்ட வெட்டத்தான் அவை தழைக்கும். அதுபோலவே புற்களை செருக்கச் செருக்கத்தான் புதிய புற்கள் உருவாகும் எனவே மரத்தின் கிளைகளை வெட்டுவதோ புற்களை செருக்குவதோ தவறாகாது என்று விளக்கம் கொடுத்ததும் ஊரவர்களுக்குப் பேசுவதற்கு எதுவும் இருக்கவில்லை. வழக்கும் தள்ளுபடியானது. இந்தவகையில் தன் தந்தையையும் தமையனையும் காப்பாற்றிய பெருமைக்குரியவர் தாத்தா. (இதைச் சொன்னவர் எமது தூரத்து உறவினரான நெல்லியானைச் சேர்ந்த விஜயரத்தினம் அவர்களாகும்).

அந்தக் காலத்தில் தாத்தா ஒரு நடமாடும் பல்கலைக்கழகமாகவே இருந்திருக்கிறார். தாத்தாவின் யாழ்ப்பாண வீடு சொந்தக்காரர்களின் தங்குமிடமாகவும் கல்வியியல் சாலையாகவும் இருந்திருக்கிறது. தானும் தனது சுற்றமும் வாழவேண்டும் என்ற நல்ல மனது கொண்டவர் என் தாத்தா. தன் பிள்ளைகளின் கல்வியைப் போன்றே ஏனையவர்களின் கல்வி வளர்ச்சியிலும் அக்கறை காட்டினார். எத்தனை பேர் வந்து தங்கினாலும் அம்மம்மா முகம் சுளிக்காமல் அவர்களுக்கு சமைத்துப் பரிமாறியிருக்கிறார்கள். இதனால் அவருக்கு அன்னபூரணி என்ற பெயரும் உண்டு. தாத்தா தனது சொற்ப வருமானத்திலும் வந்தவர்களுக்கு அனாதரட்சகராகவும் அம்மம்மாவுக்கு ஆதரவாகவும் இருந்திருக்கிறார்.

ஞாயிறு காலையில் தனது ஏனைய அலுவல்களை முடித்து சாப்பிட்ட பின்னர் தாத்தா வேட்டி நஷனலுடன் ஒரு துணிப்பையைத் தோளில் போட்டுக்கொண்டு புறப்பட்டார் என்றால் நகருக்குப் பொருட்கள் வாங்குவதற்காகப் போகப் போகின்றார் என்று அர்த்தம். அப்போது அம்மம்மா அவரிடம் மரக்கறியிலிருந்து பலசரக்கு, பேப்பர்வரை தனக்குத் தேவையான எல்லாவற்றையும் ஒரு பட்டியலாகக் கொடுப்பார். தாத்தா பொறுமையாக எல்லாப் பொருட்களையும் சைக்கிளில் வாங்கிக் கொண்டு வந்து அம்மம்மாவிடம் கொடுப்பார். அம்மம்மா அவருக்கு சூடாகத் தேநீர் கொடுத்துவிட்டு சமையலைத் தொடங்குவார். தாத்தா கொண்டுவந்த பேப்பர்களை வாசிப்பதில் மூழ்கிவிடுவார். அம்மம்மாவின் சமையலறை விவகாரங்களில் தாத்தா ஒருபோதும் தலையிடமாட்டார். அத்தோடு வீட்டு வேலைக்கோ அல்லது வளவு வேலைக்கோ வருபவர்களைக் கவனிக்கும் விடயத்திலும் தலையிடுவதில்லை. அவர்களைக் கவனிக்கும் விடயத்தை முற்றுமுழுதாக அம்மம்மாவிடமே விட்டுவிடுவார். அவர்களை வேற்றுமையாக நடாத்துவதில்லை. அவர்களும் அம்மம்மாவுடன் பாசத்துடனேயே பழகுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாத்தா, நல்ல ஒரு முற்போக்குச் சிந்தனையாளராகவும் அம்மம்மாவுக்குத் தேவையான அனைத்து விடயங்களிலும் ஒத்துழைத்திருக்கிறார். இதற்கு ஓர் உதாரணம் சொல்வதென்றால், ஒவ்வொரு நாளும் மதியம் சாப்பிட்ட பின்னர் தாத்தா ஒரு மணித்தியாலம் நித்திரை கொள்வார். நித்திரையால் எழுந்த பின்னர் சுமார் 2 அல்லது 3 மணிபோல முன் விறாந்தையில் அம்மம்மா தாத்தாவுடன் கதைத்துக் கொண்டிருப்பார்கள். அம்மம்மாவின் சந்தேகங்கள், குடும்பப் பிரச்சனைகளுக்குரிய ஒரு தீர்வுகாணும் நேரமாக இந்த நேரம் இருந்ததுதான் அவர்கள் தனியாகக் கதைப்பதற்குரிய காரணம். இதனாலேதான் அவர்கள் ஒற்றுமையான ஒரு தலைசிறந்த தம்பதியராக இருந்தார்கள். அத்துடன் தன் மனைவிக்கு சம உரிமை கொடுத்து அவரின் பிரச்சனைகளுக்குத் தீர்வு சொல்லும் நல்ல குடும்பத் தலைவனின் பண்பு அவரிடம் இருந்தது. (இது தற்போது அதிகமான ஆட்களிடம் இல்லாமையே குடும்பப் பிரச்சனைகளுக்குக் காரணம் என்பது எனது கருத்து).

நான் சிறிது வளர்ந்த பின்னர் மற்றவர்கள் அவரிடம் இலக்கிய சந்தேகங்கள் கேட்கும்போது எனக்கும் அவரிடம் பல தமிழ் இலக்கிய சந்தேகங்களைக் கேட்க விருப்பமாய் இருக்கும். ஆனால் பயத்தினால் கேட்காமல் விட்டுவிடுவேன். பின்னர் இதுவும் சாத்தியமாயிற்று அது எப்போதென்றால், நான் உயர்தரம் கற்கும்போது தாத்தா வீட்டில் இருந்துதான் வகுப்புக்களுக்கு சென்று வருவேன். அந்தக் காலத்தில் அவர் சுகவீனமாகியிருந்தார். இதன்போது அவருடன் கதைக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகம் கிடைத்தன. இந்த நேரங்களில் நான் கேட்கும் பல இலக்கிய சந்தேகங்களுக்கு எனக்குப் புரியும் விதத்தில் பதில் சொல்லியிருக்கிறார். அவரின் இறுதிக் காலங்களை அவருடன் கழிக்கும் மாபெரும் பேறு எனக்குக் கிடைத்தது. இறுதிவரை அவருடன் இருந்ததுடன் வைத்தியசாலையில் இருந்து (அவர் வைத்தியசாலையில் இருந்தது ஒருநாள் மட்டுமே) அவருக்கு சேவை புரியக்கிடைத்தது, எனது கண்முன்னேயே அவரின் உயிர் பிரிந்தது, இன்னும் மறக்கமுடியாத வேதனையாகும்.

இவரைப்போல ஒரு மனிதருள் மாணிக்கம் இக்காலத்தில் எவ்வளவு தேடினாலும் கிடைக்க மாட்டார்கள்!

**"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்படும்"**

என்னும் குறளுக்கேற்ப பல நூல்களை எழுதியும் பல அறிஞர்களை உருவாக்கியும் உள்ள தாத்தாவை இக்கால மக்கள் பெரிதாகக் கவனிக்காதது தற்போதும் என் மனதை நெருடுகிறது.

வை.சிவஜோதி
பேரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலதுறைப் புலமையில் இலங்கிய வித்துவமணி பொன். முத்துக்குமாரன்

## விண்ணுலகு நண்ணினர்

தமிழறிஞர் பொன்.முத்துக்குமாரன் சென்ற 11.12.89 திங்கட்கிழமை இறைவனடி சேரந்தார். அவருக்கு வயது 69. நல்லூர் முருக பக்தரான சைவப் பேரறிஞரை முருகன் கார்த்திகைக் கார்த்திகை விரத நன்னாளில் ஆட்கொண்டார். சிறிது காலம் நோய் வாய்ப்பட்டிருந்தார். இவரது இழப்பு தமிழ்த்தாய்க்கு ஓர் பேரிழப்பு ஆகும்.

1920ஆம் ஆண்டு மே மாதம் 5ஆம் தேதி பொன்னாலையில் பொன்னுத்துரை மாரிமுத்து தம்பதிகட்கு இரண்டாவது புத்திரராகப் பிறந்தார். ஆரம்பக் கல்வியைச் சிறப்பாக இங்கு முடித்தபின், தமிழ் மொழிமேல் கொண்ட ஆறாக்காதலால், பற்பல தடைகளையும் வசதியீனங்களையும் வென்று, சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் புகுந்து சிறந்த மாணவர்களுள் ஒருவராகத் திகழ்ந்து, முதலில் வித்துவான் பட்டத்தையும் பின்னர் **B.O.L.** பட்டத்தையும் பெற்றார்.

மகேஸ்வரி என்னும் மங்கை நல்லாளைத் தன் வாழ்க்கைத் துணையாகப் பெற்று இல்லறம் என்னும் நல்லறத்தைக் கைக்கொண்டார்.

வித்துவான் வகுப்பில் இவர் காண்பித்த திறமை காரணமாக இவரைத் தமிழ் நாட்டிலேயே தமிழ்ப் பணி புரியுமாறு அழைத்தனர். அவ்வழைப்பை அன்புடன் ஏற்று தமிழ் நாட்டிலேயே செட்டிநாடு கொப்பனாப்பட்டியிலும் பின்னர் மேலைச் சிவபுரியிலும் தமிழாசிரியராகச் சிறப்பாகப் பணி ஆற்றிய பின்னர், சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரியில் சேர்ந்து சைவப் பெரியார் சிவபாதசுந்தரம் அவர்களுடன் தமிழ்ப் பணியும் சிவப்பணியும் ஆற்றினார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் படித்த காலத்தில் சொல்லின் செல்வர் ரா.பி.சேதுப்பிள்ளை, திரு.அ.ச.ஞானசம்பந்தன், திரு.கி.வா.ஜகந்நாதன் போன்றோர் சொல்வன்மையால் கவரப்பட்டவர்.

இவரது தமிழ்ப் புலமை ஈழத்தில் மெல்லெனப் பரவிற்று. தமிழ் இலக்கிய விழாக்கள், சைவசமயச் சொற்பொழிவுகள், பத்திரிகைக் கட்டுரைகள், மாணவர்கட்கு என இவரால் எழுதப்பெற்ற பாட நூல்கள் போன்றவை இவரது தமிழ்ப் புலமையை வெளிக்கொணர்ந்தன. தனக்கே உரிய ஓர் சிறப்பான இடத்தை ஈழத்தில் பெற்றுக் கொண்டார். இதனால் ஈழத்தில் திகழ்ந்த முதலாம் தரத் தமிழ் அறிஞர்களுள் ஒருவராகத், தமிழகத்தின் தலைசிறந்த தமிழ் அறிஞர்கள் பலரால் பாராட்டப்பெற்றார்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், காஞ்சி ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் மீது மிக்க மதிப்பும் மரியாதையும் உடையவர்.

இவரது தமிழ்ப் புலமையை வியந்து, பேராதனைப் பல்கலைக்கழகம் அங்கு தமிழ்ப் பணிசிறக்க, இவரை தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்ற 1966ஆம் ஆண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைப்பு விடுத்தது. இவர் அப்பணியைத் துறந்து, வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்திலேயே தமிழ் ஆசானாகப் பொலிந்து எண்ணற்ற மாணவர் உள்ளங்களில் தமிழ் அறிவுச் சுடர் ஏற்றி, ஓய்வு பெற்றார்.

இவரது சிலம்பின் சிறப்பு நூல் இலங்கை சாகித்திய மண்டல விருது பெற்றமை சிறப்புடையது.

ஓய்வுபெற்ற பின், இறை வழிபாட்டிலும், அமைதி தேடி தியானத்திலும் ஈடுபட்டதாலும் பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளாது ஒதுங்கிக் கொண்டார். தற்பெருமை சிறிதும் இல்லாத தமிழ்ப் பண்பாளர்.

இல்வாழ்க்கையின் பயனாக உதித்த நன்முத்துக்கள் ஐந்து. ஹேமசபேஸ்வரி, நிர்மலா, சிவஞானசம்பந்தன், தயாநிதி, சிவமனோகரி.

இலைமறை காயாக வாழ்ந்த இவரிடம் பொலிந்த தமிழ்ப் புலமையை வியந்தவர்கள் அவரிடம் பழகிய ஒரு சிலராவர். இவரின் பிரிவு தமிழ் கூறும் நல்லுலகிற்கு ஓர் பேரிழப்பு ஆகும்.

திரு. வை. இரகுநாத முதலியார்
நன்றி இந்துசாதனம் டிசம்பர் 1989

*டிசெம்பர் 1989ல் திரு பொன்.முத்துக்குமாரன் அவர்களின் நினைவு மலரில் வெளிவந்தது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவமயம்

விவாக சோபன விஞ்ஞாபனம்.

நிகழும் விஷு வருடம் வைகாசி மீ 24ம் உ (7-6-41 4-30A-M—5-52A-M) வெள்ளிக்கிழமை இரவு 4-30மணி தொடக்கம் 5-52மணிவரையில் வரும் இடபலக்கின சுபமுகூர்த்த வேளையில்

| | |
|---|---|
| பொன்னாலை<br>திரு தி. பொன்னுத்துரை<br>அவர்கள் குமாரன்<br>அண்ணாமலைச் சர்வகலாசாலை<br>வித்துவான் வகுப்புமாணவன்<br>திருவளர்செல்வன்<br>முத்துக்குமாருவுக்கு | திரு அ. சுந்தரம்<br>அவர்கள் புத்திரியும்<br>எனது பௌத்திரியுமாகிய<br>திருவளர்செல்வி<br>மகேஸ்வரி தேவியை |

திருமங்கல்யதாரணஞ் செய்துவைக்கப் பெரியோர்களால் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் இஷ்டமித்திர குடும்ப சமேதராய்ச் சமுகமளித்துத் தம்பதிகளை ஆசீர்வதித்தருளுமாறு வேண்டுகின்றேன்.

நிகழ்ச்சிகள்

7-6-41 மாலை 4—6 மணிவரையில் மேளக்கச்சேரி
6 மணிதொடக்கம் வலங்கைமான் சங்கீதவித்துவான் ஸ்ரீ கோ. இராமையாபாகவதர் அவர்களால் "சீதாகல்யாணம்" என்பதுபற்றி கதாகாலக்ஷேபம் தக்கபக்கவாத்தியங்களுடன் நடைபெறும்.

சுழிபுரம்
4.6.41

இங்ஙனம்
அ. [illegible]தேசபிள்ளை


7.6.1941ல் செல்வி மகேஸ்வரி தேவி சுந்தரத்துடன் திருமணம்



திருமதி மகேஸ்வரி தேவி முத்துக்குமாரன் (1925–1996)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களுக்கு நட்டம்



*1966ஆம் ஆண்டு மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூர் நகரில் நடைபெற்ற முதலாவது தமிழாராய்ச்சி மாநாட்டில் அமரர் பொன். முத்துக்குமாரன் இலங்கைப் பேராளராகக் கலந்து கொண்ட காட்சி*

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தினால் ஈழம் எங்கும் பெயர்பெற்றது பொன்னாலை என்ற கிராமம்.

பொன்னாலையில் எங்கள் வீட்டுக்கு எதிர் வீடு எனது குஞ்சியப்பா பொன்னுத்துரை அவர்களின் வீடு. குஞ்சியப்பாவின் இரண்டாவது மகன்தான் வித்துவான் பொன்.முத்துக்குமாரன். என்னைவிட நான்கு வயது மூத்தவர். அந்தக் காலத்து ஆசாரக் குடும்பத்துச் சிறுவர்கள் பலரைப்போல் இவரும் குடுமி வைத்திருந்தார். நல்ல சிவந்த மேனியர். அழகான தோற்றத்தினர். சிறுவயதிலேயே கல்வியில் நாட்டமும் திறமையும் உள்ளவர்.

சிறுவயதில் விளையாட்டுத் தோழர்கள் தமது நண்பர்களுக் கெல்லாம் ஒரு சுருக்கப் பெயர் வைப்பது நாடளாவிய வழக்கம். வரதராசா என்ற என்னுடைய பெயரைச் சுருக்கி வரதர் என்பார்கள். முத்துக்குமாரு என்ற சின்னண்ணரின் பெயரைச் சுருக்கி முத்தர் என்பார்கள்.

நான் அன்றைக்கும் வரதர் இன்றைக்கும் வரதராகவே இருக்கிறேன்.

சின்னண்ணரோ அன்று முத்தர் ஆக இருந்தவர், தமது கல்விப் புலமையினால் வளர்ந்து வித்துவான் பொன்.முத்துக்குமாரன் பி.ஓ.எல். ஆகி நிற்கிறார். அது அவரின் உழைப்பின் – கல்வியின் மேற்கொண்ட காதலின் அடையாளம்.

எங்கள் ஊர்ச் சிறுவர்களைப்போல வித்துவான் அவர்களும் ஐந்தாம் வகுப்புவரை பொன்னாலை அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் கல்வி கற்று ஆறாம் வகுப்புக்குப் பின் மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் கல்வி கற்று எஸ்.எஸ்.சி சித்தியடைந்ததும் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துக்குச் சென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துக்கு இவர் கல்வி கற்கச் சென்றது ஒரு கதை. அங்கு போய் வித்துவான் வகுப்பில் சேரலாமென்று யார் மூலமோ அறிந்த சின்னண்ணா, தகப்பனாரிடம் அனுமதி கேட்டார். குஞ்சியப்பா மறுத்துவிட்டார். மகனைப் பிரிந்திருக்க விரும்பாத மனநிலை ஒருபுறம். நிதி நிலைமை மற்றொரு புறம். தகப்பனாரின் மறுப்பைக் கேட்டுவிட்டு சின்னண்ணர் வாளாவிருந்து விடவில்லை.

“சிதம்பரம் போகாமல் இருப்பேனோ இந்த ஜென்மத்தை வீணாகக் கழிப்பேனோ” என்று நந்தனார் ஒற்றைக்காலில் நின்று சிதம்பரம் போனதுபோல, சின்னண்ணரும் ஒற்றைக் காலில் நின்று கடைசியில் வெற்றிபெற்று, சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சென்று வித்துவான் வகுப்பில் சேரந்தார். நான்கு வருடங்கள் அங்கு கற்று வித்துவான் ஆனார்.

கற்கும்போதே இவரது திறமையைக் கண்ட செட்டிநாட்டவர், மேலைச் சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரியிலும், கொப்பனாம்பட்டி கலைமகள் கல்லூரியிலும் தமிழாசிரியராக நியமித்தார்கள்.

செட்டி நாட்டில் நல்ல பெயரும் புகழும் பெற்ற வித்துவான், யாழ்ப்பாணம் மீண்டு வந்து 1947ல் சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரியிலும், அதன்பின், நெல்லியடி ஞானாசாரியர் கல்லூரி, காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி ஆகிய இடங்களிலும் தமிழாசிரியராகப் பணியாற்றி, 1955ல் யாழ் வைத்தீஸ்வர வித்தியாலயத்துக்கு வந்து, ஓய்வுபெறும்வரை அங்கேயே கடமையாற்றினார்.

இடையில் 1953ல் பி.ஓ.எல். பட்டம் பெற்றார். 1966ல் மலேசியாவில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் பங்குபற்றிச் சிறப்பித்தார்.

1966ல் கண்டியிலிருந்து சுமார் இரண்டு ஆண்டுகாலம் பேராதனை பல்கலைக்கழகத் தமிழ்ப்பீடத்தை அலங்கரித்தார்.

வித்துவானுடைய உள்ளத்திலிருந்து தமிழ் இன்பத் தேனாக ஊற்றெடுக்கும்.

அவர் எழுதினால் அத்தனையும் முத்துக்கள்.

அவர் பேசினால் அத்தனையும் இரத்தினங்கள்.

உண்மை வெறும் புகழ்ச்சியில்லை.

தமிழை இப்படித்தான் எழுதவேண்டுமென்று அவர் எழுதிக் காட்டினார்.

தமிழில் இப்படித்தான் பேசவேண்டுமென்று அவர் சொற்பொழிவுகள் ஆற்றிக் காட்டினார்.

ஒரு காலத்தில், வித்துவான் சொற்பொழிவாற்றுகிறார் என்றால் அதைக் கேட்பதற்கென்றே தமிழ்த்தாகம் கொண்ட ஒரு கூட்டம் அலையும்.

அவர் நாவில் சரஸ்வதி விளையாடினாள் என்பார்கள்.

சொற்சுவை, பொருட்சுவை, சுருங்கக் கூறல், விளங்க வைத்தல் – அத்தனை சிறப்புக்களும் அவருடைய சொற்பொழிவுகளில் நிறைந்திருக்கும்.

தமிழ்மரபு, மாணவர் கட்டுரைகள், செந்தமிழ்த் தேன், இந்து சமய பாடத்திரட்டு, சிலம்பின் சிறப்பு ஆதியன வித்துவான் எழுதிய சில நூல்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றில் தமிழ் மரபு தமிழ் கற்போருக்கு அருமருந்தன்னது. உயர் வகுப்புகளுக்காய மொழி நூல் என்று அது குறிப்பிடப்பட்ட போதிலும், இன்றைக்கும் தமிழ்மொழியைக் கற்க விரும்பும் எல்லோருக்கும் அருமையான ஒரு கைநூலாக விளங்குகிறது.

அந்நூலைப் பாராட்டி அணிந்துரை வழங்கிய பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள் "இந்நூலை யாத்துதவிய வித்துவான் பொன்.முத்துக்குமாரன் பி.ஓ.எல். அவர்கள் தமது உபகார விசேஷத்தினால் உள்ளூர்ப் பழுத்ததொரு பயன் மரமாயினார். தமிழ் உலகு அக்கனி தரும் மரத்தைப் பேணி வளர்த்துப் பயன் பெறுவதாக" என்று குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி நூலைப் பாராட்டிய பண்டிதர் சோ.இளமுருகனார், '...அவற்றைச் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் மிகத் திட்ப நுட்பமாக ஆராய்ந்து தமிழ்ப் பாதுகாப்புச் செய்தனர். அவருக்குப் பின்னர் தமிழ் மரபு என்னும் இந்நூலாசிரியரே அவ் வரம்புகளைப் புதுப்பித்துச் செந்தமிழ்ப் பாதுகாப்புச் செய்திருக்கிறார்' என்று கூறியிருக்கிறார்.

சிலம்பின் சிறப்பு என்னும் இவரது கட்டுரை நூல் இலங்கைச் சாகித்திய மண்டலத்தின் விருது பெற்றது.

பழந்தமிழ் இலக்கிய இலக்கண நூல்களில் ஆழ்ந்த புலமை வாய்ந்த வித்துவான் அவர்கள், மறுமலர்ச்சித் தமிழை உதாசீனம் செய்து ஒதுக்கியவரல்லர்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார் போன்ற மூதறிஞர்களின் எழுத்துக்களை நயந்தவர். இன்றைய தமிழ் எழுத்தாளர்களையும் ஆர்வத்தோடு படித்துக் கொள்வன கொண்டார். தினசரிப் பத்திரிகைகளையும், ஆனந்தவிகடன், குமுதம், கல்கண்டு போன்ற சஞ்சிகைகளையும் அவர் விரும்பி வாசிப்பார்.

வித்துவான் அவர்களுடைய தமிழ் அறிவுக் கடலிலிருந்து ஒரு சிறு துளி மட்டுமே எமக்குக் கிட்டியது.

அவருடைய வளமான பேச்சுக்களாலும் எழுத்துக்களாலும் கற்றோரும் மற்றோரும் அவரை நாடி வந்து கொண்டிருந்த சமயத்தில், அவரோ –
தமது பாதையை வேறு வழியில் திருப்பிக் கொண்டார்.

இந்தப் புகழ் என்ற மாயையில் சிக்கிவிடாமல் இறைவன் தக்க தருணத்தில் அவரைத் தடுத்தாட்கொண்டு, தம்பக்கம் ஈர்த்துக் கொண்டார் என்று அவரது இறுதிச் சடங்கில் இரங்கலுரை ஆற்றிய அவரது ஆசிரிய நண்பர் ஒருவர் குறிப்பிட்டார். உண்மை.

நாங்களெல்லாம் ஓடியோடித் தேடிக் கொண்டிருக்கும் அந்தப் புகழே அவரைத் தேடிவந்த போதும், அவர் அதை ஒரு புறத்தே ஒதுக்கிவிட்டு, தமது ஆன்மீக ஈடேற்றத்தை நாடிச் சென்றார்.
அது அவருக்கு இலாபம்; தமிழ் மக்களுக்கு பாரிய நட்டம்!

வரதர்

தி.ச.வரதசாரன், உரிமையாளர், ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்

*டிசெம்பர் 1989ல் திரு பொன்.முத்துக்குமாரன் அவர்களின் நினைவு மலரில் வெளிவந்தது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். பொன் முத்துக்குமாரன்
# நான் பெற்றவையும் பேணுபவையும் - நினைவுக் குறிப்புக்கள்

தமிழர் பண்பாடு என்பது தமிழ் மொழி என்ற ஞானப் பேராற்றைச் சுற்றி வளர்ந்த நாகரீக வாழ்வு முறையாகும். இதில் மொழியைக் கற்றல், ஆர்வமுடன் கற்பித்தல், தமிழ் இலக்கணங்களை நுட்பமாக அறிதல், பல்வேறு நூல்களைப் படைத்தல், தமிழ் ஆய்வு மகாநாடுகளில் ஆய்வுகளை சமர்ப்பித்தல், வாசிக்க இயலாதவர்களுக்காக தமிழ் இலக்கிய பேச்சுக்களை நிகழ்த்துதல் என்பன முக்கியமானவை. இத்தகைய மொழிப் பண்பாடு சார்ந்து உன்னத வாழ்வு வாழ்ந்தவர் அமரர் பொன்னுத்துரை முத்துக்குமாரன் ஆவார்.

எனது அறிவிலும் இதயத்திலும் ஆட்சி செய்யும் பல முதன்மையான புலமையாளர்களில் இவர் முக்கியமானவர். இவர் தமிழ் கூறும் நல்லுலகில் வித்துவான் பொன். முத்துக்குமாரன் என்றே அறியப்பட்டார்; அன்பு காட்டி அழைக்கப்பட்டவர்; எனக்கு தமிழ் மொழி கற்பித்த பலரில் உன்னதம் மிக்கவர்.

அவரைப் பற்றி நினைப்பதும், நினைவுகளில் மகிழ்ச்சி கொள்வதும் பெருமை. தமிழ் மொழியும் தமிழ் இலக்கணமும் தமிழ் ஆய்வும் தொன்மையுடன் சிறந்து விளங்குவதற்குப் பங்காற்றிய தமிழ்த் தென்றல்களில் என் ஆசான் பொன்.முத்துக்குமாரன் முக்கியமானவர், முதன்மையானவர்.

**வகுப்பறையில் கண்டேன்.**

1962 காலப்பகுதிகளில் நான் பதினான்கு வயதுச் சிறுவன்; அப்போதைய பத்தாம் வகுப்பு; அரை நூற்றாண்டுக்கு முந்திய மாணவப்பருவ வாழ்வு. யாழ்ப்பாண நகரத்து பாடசாலைகளில் தனித்தன்மை கொண்டதாக வளர்ந்து பெருமை பெற்றிருந்தது இராமகிருஷ்ண மிஷன் வைத்தீஸ்வர வித்தியாலயம். தற்போது வைத்தீஸ்வராக் கல்லூரி என்று அழைக்கப்படுகிறது. இரண்டாயிரம் மாணவர்கள் வரை கல்வி கற்றுக்கொண்டிருந்த பாடசாலை. அது ஒரு மேல்நிலைப் பள்ளி. சாதி மதபேதமற்று சமரச சன்மார்க்க உணர்வுகளுடனான நீதி ஒன்றை மனதிற் கொண்டு கல்விக்காக கதவுகளை திறந்து விட்டிருந்தது.

அக்காலத்தில் அங்கு கற்பித்த ஆசிரியர்கள் அனைவரும் ஞான குருக்கள். அதில் வித்துவான் பொன். முத்துக்குமாரன் முக்கியமானவர். வரலாறுகளில் தவிர்க்க முடியாத தமிழ்ப் புலமையாளர். விழுமியம் நிறைந்த தமிழ் ஆசிரியர்.

முதலில் நான் அவரைக் கண்டது வகுப்பறையில் தான். வகுப்பறையில் இந்துக்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் என எல்லாச் சமயத்தவர்களும் இருந்தனர். வணிகப் பெருவள்ளல்களின் பிள்ளைகளிலிருந்து நகர்ப்புற உடல் தொழிலாளர்களின் பிள்ளைகள் வரை இருந்தனர். வகுப்பு நிறைய மாணவர்கள், அவர்களில் நானும் ஒருவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்.முத்துக்குமாரன் அவர்களது உடல் வண்ணம் முதலில் கண்டேன், புலமை ஒளி பின்பு கண்டேன். நல்ல உயரம் கொண்டவர்; பொன்னிற மேனியர்; பாலைப் பழிக்கும் வெண்மை நிறம் மிக்க வேட்டி, வெள்ளை நிற நஷனல், மடிப்புக் கலையாது கழுத்தில் சுற்றப்பட்டு முன்பக்கமும் பின்பக்கமும் இரு அங்கங்களும் தொங்கும் சால்வை, நிமிர்ந்த நன்நடை, நேர் கொண்ட பார்வை, கண்களில் அறிவின் ஒளி வீச்சு.

அவரைக் கண்டதும் வியந்தேன், இரசித்தேன். அந்த வயதில் அத்துணை அழகான மனிதரை நான் கண்டதேயில்லை. அழகிய தமிழ்மகன். என் அருமைத் தமிழ் ஆசான். பொன். முத்துக்குமாரனது நடை, உடை, பாவனை, உரையாடல் எல்லாமே இரசிக்கவும் பெருமை கொள்ளவும் தக்கனவாயிருந்தன.

வகுப்பறையில் நுழைந்து கற்பிக்கத் தொடங்கினார். மொழியைப் பயன்படுத்திய பாங்கு இனிமையும் நிதானமும் நிறைந்திருந்தது. கற்பிக்கக் கற்பிக்க அவரது அறிவின் ஆழமும் அகலமும் வெளிப்பட்டன. அப்போது நான் சிறுவன் தான். அவரது கற்பித்தலில் இரசித்து மயங்கிப் போனேன். 'தமிழ் கற்பிப்பவர்கள் மொழியை இரசிக்கக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்பார் கி.வா.ஜகந்நாதன் அவர்கள். எனது ஆசான் அதைத்தான் செய்து கொண்டிருந்தார். அன்றிலிருந்து எனது முதல் விருப்பத்துக்குரிய பாடமாகத் தமிழ் மொழி உணர்வுகளில் மேலாதிக்கம் செலுத்தியது. எனது வகுப்பறைப் பாட அறிவுக்காக மட்டுமன்றி எனது மகிழ்ச்சிக்குரிய நுகர்ச்சியாகவும் தமிழ் மொழியைக் கற்கத் தொடங்கினேன்.

அப்போது எங்களுக்குத் துறைப்பாட நூலாக இருந்தது 'அலையும் கலையும்' என்ற நூல். சொல்லின் செல்வர் இரா.பி.சேதுப்பிள்ளை எழுதிய அழகிய நூல். இரு தினங்களில் அதை முழுமையாக வாசித்து முடித்தேன். தமிழ் மொழி மேடைப் பேச்சுக்கு உரிய நயமும் இனிமையும் கொண்டதென்ற உணர்வையும் நம்பிக்கையையும் என்னுள் விதைத்தவர் என் ஆசான் பொன்.முத்துக்குமாரன் அவர்களே.

பிற்காலத்தில் பல்கலைக்கழக வாழ்க்கையிலும், பின் கம்பன் கழக விழாக்களிலும் இலக்கியச் சொற்பொழிவுகளை ஆற்றுகின்ற ஆன்மீக பலத்தை அவரிடமிருந்தே பெற்றேன். இதுதான் நல்ல மொழியாசிரியர்களின் வெற்றியாகும். நிலத்தின் மகிமை அதன் விளைச்சல் தானே!

அவரது நிதானமும், அறிவின் முதிர்ச்சியும், மாணவர்கள் மீதான கவனவீச்சும், இடை வினைகளும் வகுப்பறையை அமைதி நிறைந்தாக நிலை பெறச் செய்தன. ஆசிரியர் அமைதியின் நிலைக்களனாக இருந்தார். மாணவர்களிடம் ஒருபோதும் கடும் வார்த்தைகள் பேசமாட்டார். மாணவர்களை முரண்பட்ட உணர்வுகளுடன் முறைத்துப் பார்க்கமாட்டார். உடன்பாடுகளில்லையாயின் மௌனமாகச் சென்று விடுவார். இது எனது மாணவப்பருவத்தில் அவரைப் பார்த்து உணர்ந்துகொண்டவை.

எனது தனிப்பட்ட வாழ்க்கையிலும், தொழில் வாழ்க்கையிலும் பல முன்மாதிரிகளை அந்த வயதிலேயே அவரிடமிருந்து பார்த்தும், உணர்ந்தும் கற்றுக்கொண்டேன். இளமையிற் கல்வி சிலையில் எழுத்தன்றோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சகபாடிகளுடன் ஆசிரியர்**

தொழில் வாழ்க்கையில் வினைத்திறன் மிக்கவர்களை மதிப்பீடு செய்தவற்கு சகபாடிகள் மதிப்பீடு **(Peer Evaluation)** முக்கியமானதென்று நவீன முகாமைத்துவ நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர். தொழில் புரியுமிடங்களில் இணைந்து தொழில் புரியும் சகபாடிகளிடம் மரியாதை உருவாதல் என்பது ஒரு ஆசிரியர் தம்மைப் பற்றி என்ன சொல்கிறார் என்பதில் இல்லை. அவர் நாளாந்தம் என்ன செய்கிறார், எப்படிப்பட்ட நடத்தைக் கோலங்களை வெளிப்படுத்துகிறார், சகபாடி தொடர்புகளை எவ்வாறு பேணிக் கொள்கிறார் என்பதில் தான் தங்கியுள்ளது. அடிப்படை நல்லியல்புகளில் தங்கியுள்ளது.

தவமும் தவமுடையார்க்கே ஆகும். திருவாளர் பொன்.முத்துக்குமாரன் ஆசிரியருடன் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் அவரது காலத்தில் கற்பித்த ஆசிரியை திருமதி லெட்சுமி தியாகராஜா அவரைப்பற்றி பின்வருமாறு குறிப்பிடுகிறார்; 'நேரம் பிந்தாது பாடசாலைக்கு சென்று கையொப்பமிட்டு ஆசிரியர்களது ஒய்வறைக்குச் சென்று விடுவார். அவர் நுழைந்தால் சக ஆசிரியர்கள் அமைதியாகி விடுவார்கள். வகுப்புக்கள் இல்லாத வேளைகளில் நூலகத்தில் அகராதிகளையும், தமிழ் இலக்கண இலக்கிய நூல்களையும் புரட்டிப் பார்த்துக்கொண்டிருப்பதைக் காணலாம். அதிகம் பேச மாட்டார். அமைதியான, கபடமற்ற, அன்பு கலந்த பார்வை, கேட்கும் கேள்விகளுக்கு மாத்திரம் உரிய பதிலை விளக்கமாகக் கூறுவார். ஆசிரியர்களைப் பெரியவர் சிறியவர் என்னும் வேற்றுமை ஏதுமின்றிப் பழகுவார். அன்பும் மரியாதையும் கொண்டு பழகும் பெருமைக்குரிய ஆசான் அவர்' (வைத்தீஸ்வரன், கனடா 2018).

ஆசான் பொன். முத்துக்குமாரன் அவர்கள் மலேஷியாவின் தலைநகர் கோலாலம்பூரில் நடைபெற்ற முதலாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் இலங்கையிலிருந்து பேராளராகக் கலந்துகொண்டார். அத்தகைய அனுபவங்களையெல்லாம் ஆசிரியர் அறையில் எளிமையுடன் சக ஆசிரியர்களுடன் பகிர்ந்து கொள்ளும் பண்பாளராக இருந்தார்.

ஆசிரியை லெட்சுமி, ஆசிரியரது அயல் வீட்டில் வசித்து வந்தவர் என்ற முறையில் அவரது குடும்பம், அதன் பண்பாடு பற்றி பின்வருமாறு குறிப்பிடுகிறார் 'ஆசிரியரைப் போலவே அவரது குடும்பத்தவர்கள் எல்லோரும் அன்புடனும், பண்புடனும், அமைதியுடனும் பழகும் சுபாவமுள்ளவர்கள். பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் கட்டுக்கோப்பாக வளர்க்கப்பட்டவர்கள். சமயப் பற்று மிகுந்த குடும்பம். ஆசான் தமிழ் அறிவுக் கடல்; ஆத்ம ஞானி; பேரறிவுடைய ஆசான்.' தமது சமுதாயச் சூழலில் இத்தகைய உயரிய எண்ணங்களை உருவாக்கும் வகையிலான வாழ்க்கைப் பாங்கை வடிவமைத்து வாழ்ந்த பெருந்தகை அவர்கள்.

**கல்வியும் தொழில் வாழ்வும்**

பொன்னாலை என்ற கிராமம் தமிழும் சைவமும் செழுமை பெற்ற மகிழ்ச்சியான கிராமம். பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயம் ஊருக்குப் புகழ் சேர்த்திருந்தது. 1920 மே மாதம் ஐந்தாம் திகதி இக்கிராமத்தில், ஆசாரம் மிக்க சைவக் குடும்பத்தில், பொன்னுத்துரையின் இரண்டாவது மகனாக பிறந்தார். சிறுவயதில் ஆசாரக் குடும்பத்து சிறுவர்கள் குடுமி வைத்திருப்பர். இவரும் பள்ளிப்பருவத்தில் குடுமி வைத்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னாலை அமெரிக்கன் மிஷன் பாடசாலையிலும், மூளாய் சைவப் பிரகாச வித்தியாசாலையிலும், பின்பு காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலையிலும் பள்ளிப் படிப்பை மேற்கொண்டிருந்தார். இவரது பள்ளித் தோழர்கள் இவரை அன்போடு 'முத்தர்' என்றே அழைத்தனர். இதே பிரதேசத்தில் ஆசிரியர்களுக்கான சேவைக் கால ஆலோசகராகப் பணியாற்றிய போது எனது ஆசான் கற்ற இத்தகைய எல்லாப் பாடசாலைகளையும் தரிசிக்கும் வாய்ப்பை இறைவன் எனக்குத் தந்திருந்தான்.

பள்ளிக் கல்வியைத் திறமையாகக் கற்று முடித்த அவர், தென்னிந்தியாவில் சிதம்பரத்திலுள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இணைந்து 'வித்துவான்' பட்டம் பெற்றார். தொடர்ந்து தமிழ் மொழிக் கல்வியில் உச்சம் தொட்டிருந்த அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழித்துறையில் **B.O.L.** பட்டம் பெற்றார். 1953 இல் அவர் வித்துவான் பொன்.முத்துக்குமாரன் **B.O.L.** என்ற பெயருடன் கற்பித்தல் தொழிலில் இணைந்தார்.

நாட்டுக்கோட்டைச் செட்டிமாரால் நிர்மாணிக்கப்பட்ட அண்ணாமலைப் பல்கலைக் கழகம் எத்துணை பெரிய உயர் கல்வி நிறுவனம் என்பதை நான் கண்டு வியந்தேன். 2017 இல் அப் பல்கலைக்கழகத்தினர் சர்வதேச கல்வி மகாநாடு ஒன்றை ஏற்பாடு செய்து தொடக்கவுரை ஆற்றுவதற்கு என்னை அழைத்திருந்தனர். அப்போது எனது ஆசான் கற்ற மொழித் துறையையும் தரிசித்து பெருமகிழ்வு அடைந்தேன்.

அவ்வாறு பட்டப் படிப்பைத் தொடர்ந்த காலத்தில் அவரது கல்வித் திறமை, ஆசாரம், நன்நடத்தை காரணமாகச் செட்டி நாட்டில் நல்ல புகழ் பெற்றார். இதனால் இந்தியாவில் மேலைச் சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரியிலும், கொப்பனாப்பட்டி கலைமகள் கல்லூரியிலும் தமிழாசிரியராகப் பணிபுரிந்து பெருமையடைந்தார்.

பட்டதாரியான பின்பு ஈழத்தில் ஏறக்குறைய மூன்று தசாப்த காலம் தமிழ் ஆசிரியராகப் பல பாடசாலைகளிற் பணிபுரிந்தார். எனக்குத் தமிழ் கற்பித்த வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் (1953–1978) கால் நூற்றாண்டு காலம் கற்பித்தார். 1962, 1963 காலப் பகுதிகளில் அவரிடம் தமிழ் இலக்கணமும், தமிழ் இலக்கியமும் கற்றேன். இதற்கு முன்னதாக சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரியிலும், காரைநகர் யாழ்ற்றன் கல்லூரியிலும், நெல்லியடி ஞானாசாரியார் கல்லூரியிலும் கற்பித்திருந்தார்.

பாடசாலையில் கற்பித்துக் கொண்டிருந்த காலத்தில் இலங்கையின் முதலாவது தேசிய பல்கலைக்கழகத்தில், தமிழ் மொழித்துறைப் பட்டதாரி மாணவர்களுக்குத் தமிழ் கற்பிப்பதற்காக அவரை விரிவுரையாளராக அழைத்திருந்தனர். 1966–1968 காலப்பகுதியில் அங்கு பணியாற்றி அதியுயர் மதிப்பையும் பெற்றார்.

### படைப்பும் பரவலாக்கமும்

தாம் கற்ற கல்வியை அடுத்த தலைமுறைக்குக் கைமாற்றுவது அறிஞர் தம் சமூகக் கடமையாகும். குறிப்பாக ஆசிரியர்கள் இந்தக் கோட்பாட்டுக்குப்பட்டவர்கள் தானே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மரபு, இன்பத் தமிழ், சிலம்பின் சிறப்பு, செந்தமிழ்த் தேன் போன்ற ஆய்வு நூல்களை எழுதினார். ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் உதவும் வகையில் கம்பராமாயணம் (1, 2, 3), இந்து சமய பாடத்திரட்டு, மாணவர் கட்டுரைகள் போன்ற நூல்களையும் எழுதினார். ஆசான் பொன்.முத்துக்குமாரன் அவர்களது வாசிப்பு வீச்சு, மொழித் தேர்ச்சி, ஆய்வு நுட்பம் என்பவற்றை இந்த நூல்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

இவரது 'தமிழ் மரபு' நூல் இலங்கையிலும், இந்தியாவின் தமிழகத்திலும் அதியுயர் அங்கீகாரம் பெற்றிருந்தது. பல்வேறு மொழி ஆய்வாளர்களின் கலந்தாய்வுகளில் வெகுவாகப் பேசப்பட்டது. தமிழ் நாட்டில் அண்ணா பல்கலைக்கழகம், டெல்லிப் பல்கலைக் கழகம் மற்றும் பல பல்கலைக்கழகங்களில் பாடநூலாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

இவரது 'சிலம்பின் சிறப்பு' என்ற நூல் 1966 இல் சாகித்திய அக்கடமி விருது வழங்கிப் பெருமைப்படுத்தப்பட்டது. இலங்கை கம்பன் கழகத்தில் 1964–1966 காலப் பகுதிகளில் தலைவராக இருந்து இலக்கியப் பணியாற்றினார். புகழ் பெற்ற தமிழாசான் சொக்கலிங்கம் (சொக்கன்) அவர்களுடனும் இணைந்து இக்கழகத்தில் செயல்ப்பட்டார். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் சொக்கன் ஆசிரியரிடம் கற்கவும் பழகவும் எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. இலக்கியப் படைப்பாளி 'நந்தி' அவர்களுடனும் இணைந்து பணியாற்றியிருந்தார். 'நந்தி' என்ற புனைப்பெயர் கொண்ட மருத்துவ கலாநிதி சிவஞானசுந்தரம் அவர்களுடன் பழகுவதற்கும், செயற்திட்டங்களில் இணைந்து செயலாற்றுதற்குமுரிய வாய்ப்புக்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் காலத்தில் எனக்குக் கிட்டியிருந்தன.

எனது மரியாதைக்குரிய ஆசானுடன் இலக்கியப் பணி புரிந்தவர்களுடன் பழகக்கூடிய வாய்ப்பை இறைவன் எனக்கு அளித்ததை எண்ணிப் புழகாங்கிதமடைகின்றேன்.

**நினைவுகளும் சமர்ப்பணமும்**

எனது தொழில் வாழ்க்கையில் பல உண்மை மிகுந்த நடத்தைகளையும், அணுகுமுறைகளையும் பரந்துபட்ட வாசிப்பு நாட்டத்தையும் கையாள்வதற்கு வழிகாட்டியவர்களாகவும் முன்னோடிகளாகவும் இருந்தவர்கள் எனது பள்ளி ஆசிரியர்கள்தான்.

எனது குடும்பத்தினரிடமிருந்து பெருமைக்குரிய தொழில்சார் விழுமியங்களைக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிட்டியதில்லை. அனைத்தையும் அக்காலத்து நல்லாசிரியர்களிடம் இருந்துதான் கற்றேன், பெற்றேன்.

இவ்வாறு கற்பதற்கும், உணர்வதற்கும், வாழ்வதற்கான விழுமியமாக நம்புவதற்குமுரிய அறிவையும், பல அனுபவங்களையும் திருவாளர் பொன்.முத்துக்குமாரன் போன்ற ஞான குருக்களிடமிருந்துதான் பெற்றுக்கொண்டேன்.

உடைப் பண்பாடு, நேர முகாமைத்துவம், மனித உறவுகளில் மாண்பு, கற்பதற்காக தொடர்ந்து கற்றல், உண்மையாகவே கற்பித்தல், மாணவர்களை நேசித்தல், மாணவர்களது உயர்ச்சிக்கு வழிகாட்டுதல், கற்றதையும் அனுபவத்தையும் நூல்களாக யாத்தல், ஆய்வு மகாநாடுகளில் அதிக ஆர்வத்துடன் பங்கேற்றல் போன்ற பல்வேறு அம்சங்களை அவர்களைப் பார்த்துக் கற்றுக்கொண்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலகாலம் உயர்பள்ளி ஆசிரியராகவும், பலகாலம் பல்கலைக்கழகத்தில் ஆசிரிய கல்வித்துறையில் பேராசிரியராகவும் பணியாற்றும் வாய்ப்பை இறைவன் எனக்குத் தந்துள்ளான்.

இதில் என் பெற்றோர்களைப் போலவே எனக்கு மொழி போதித்த அனைத்து ஆசிரியர்களும் பெரும் பங்காற்றியுள்ளனர். இன்று பணி நிலையில் ஓய்வு பெற்ற பின்பும் எனது பெருமைக்குரிய வழிகாட்டியாகவும், தலைமைக் குருவாகவும் விளங்கிய அமரர் பொன்.முத்துக்குமாரன் அவர்கள் பற்றிய நினைவுகளை மீட்பது எனது சிறு பராயத்து வாழ்வுக்குத் திரும்புவது போன்ற குதூகலங்களை அள்ளித் தருவதாகவுள்ளது.


அதியுயர் நன்றியுணர்வுகளுடன் என் ஆசான், தமிழறிஞர் பொன்.முத்துக்குமாரன் அவர்களது நூறாவது பிறந்த தினத்தை நினைவு கூர்ந்து இக்கட்டுரையை எழுதுவதில் நிலைத்திருக்கும் மனநிறைவு கொள்கிறேன்.

பேராசிரியர். மா. சின்னத்தம்பி,
கல்வியியல் துறை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம், இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1969ல் மூத்த மகள் ஹேமசபேஸ்வரியின் திருமணத்தில்...



1980ல் இரண்டாவது மகள் நிர்மலாவின் திருமணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1982ல் இரண்டாவது மகன் தயாநிதியின் திருமணத்தில்
மகள்கள், மருமகன், பேரப்பிள்ளைகளுடன்



1987ல் கடைசி மகள் சிவமனோகரியின் திருமணத்தில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவாழ்வு கண்ட இல்லற ஞானி

அறிவொளி வீசும் கண்கள், அமைதி தவழும் முகம், உயர்ந்த உருவம், உயர்ந்த உள்ளம் – இவையாவும் ஒருசேர் அமைந்த மனிதரை நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் தியான நிலையிற் பலமுறை கண்டிருக்கிறேன். இன்று அவர் நல்லூர்க் கந்தன் அருளொளியிற் சங்கமமாகி விட்டார். அவர் தான் பொன்.முத்துக்குமாரன் என்னும் இல்லற ஞானி.

கடந்த பதினைந்து ஆண்டு காலமாக வாழ்ந்த முத்துக்குமாரன் வேறு, அதற்கு முன் வாழ்ந்த முத்துக்குமாரன் வேறு. இரு வேறு வாழ்வும் கண்ட முத்துக்குமாரன் அவர்களை அறிந்துகொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இதனை ஒரு நற்பேறே என்று கருதுகின்றேன்.

எழுபது வயது நிறைவதன் முன் மண்ணுலக வாழ்வை நீத்த முத்துக்குமாரன் அவர்கள் பொன்னுத்துரை மாரிமுத்து தம்பதிகளின் இரண்டாவது மகன் ஆவர். தமது இளமைக் கல்வியை யாழ்ப்பாணம் சுழிபுரப் பகுதியிலுள்ள கல்வி நிலையங்களில் முறையாகப் பயின்ற முத்துக்குமாரன் அவர்கள் தமிழகம் சென்று அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் 1943இல் வித்துவான் என்னும் பட்டத்தையும் 1953இல் அப் பல்கலைக்கழகத்தின் B.O.L. என்னும் பட்டத்தையும் பெற்றார். தமிழகத்தின் தமிழ்ப் புலமையிற் பேரும் புகழும் பெற்றிருந்த மகாமகோபாத்தியாய, பண்டிதமணி, முதுபெரும் புலவர் மு.கதிரேசன் செட்டியார், சொல்லதிகார விளக்கப் புலமைமிக்க பூவராகம்பிள்ளை என்னும் புலவர் பெருமக்களிடம் முத்துக்குமாரன் அவர்கள் தமிழிலக்கண இலக்கியங்களை மரபுநெறி தவறாது பயின்றார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அவர் பெற்ற தமிழ்ப் புலமையை மதித்த செட்டிநாட்டுப் பெருமக்கள் சிலர் அவரின் தமிழாசிரியப் பணியை அங்கே பயன்படுத்த விரும்பினர். அதனால் அவர் சிறிது காலம் செட்டிநாட்டில் கொப்பனாப்பட்டி, மேலைச் சிவபுரி என்னும் இடங்களில் தமிழாசிரியராகப் பணி புரிந்தார்.

பொன்.முத்துக்குமாரன் அவர்களின் புலமையைத் தமிழகப் புலமையுலகம் எவ்வாறு மதித்தது என்பதை இங்குள்ள பலர் அறியாமல் இருக்கலாம். ஆயினும் அவர் புலவர் போற்றும் புலமை மிக்கவர் என்பதில் எனக்கு எத்தகைய ஐயமுமில்லை. ஏறத்தாழ முப்பதாண்டுகளுக்கு முன் அண்ணாமலைப் பல்கலைக்கழத்தின் சிறப்புத் தமிழ் மாணவனாக யான் பயின்ற காலத்தில் டாக்டர் வித்துவான் ம.சுந்தரம் அவர்கள் முத்துக்குமாரன் அழுத்தமான தமிழ்ப் புலமையுள்ளவர், சொல்லதிகாரப் புலமை மிக்கவர் என்று கூறியது இன்று நினைவுக்கு வருகின்றது. அன்று வித்துவான் பொன்.முத்துக்குமாரனோடு நேர்த்தொடர்பு எதுவும் பெறாத யான் பின்னர் இலங்கையில் அவரின் சொல்லாற்றலையும், எழுத்தாற்றலையும், நன்றாக அறிந்துகொள்ளும் வாய்ப்பைப் பெற்றேன். கேட்டாரைப் பிணிக்கும் தகைமையும் கேளாரும் வேட்ப உரைக்கும் திறமையும் மிக்கவர் அவர் என்பதைப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் அவரைக் கண்டவர்களும் கேட்டவர்களும் அறிவர். அக்காலத்தில் அவர் பெற்ற பெயரையும் புகழையும் சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி, யாழ் வைத்தீஸ்வர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தியாலயம், பேராதனைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றிற் பயின்ற மாணவர்கள் அறிவர். அவரின் சகாக்களாவும் நலன் விரும்பிகளாகவும் விளங்கிய சைவப் பெரியார் சிவபாதசுந்தரனார், அம்பிகைபாகன், தமிழ்ப் பேராசிரியர் வி.செல்வநாயகம் ஆகியோரும் அறிவர்.

நல்லாசிரியராகப் பணிபுரிந்த பொன்.முத்துக்குமாரன் அவர்களுக்கு நல்ல தமிழ் வாய்ப்புக்களை வரைந்து கொடுத்த பெருமை யாழ் வைத்தீஸ்வர வித்தியாலயத்திற்கே சிறப்பாக உரியது. இக் கல்வி நிலையத்தில் அவர் பணிபுரிந்த சேவைக் காலத்தை அவரின் தமிழ் வாழ்வின் பொற்காலம் எனலாம். தமிழ் மரபு தொடக்கம் சிலம்பின் சிறப்பு வரை அவர் எழுதிய நூல்கள் கல்வியுலகிலும் தமிழுலகிலும் நல்ல வரவேற்பைப் பெற வைத்தீஸ்வர வித்தியாலயம் அவருக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்தது. அவரோடு வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் பணிபுரியும் வாய்ப்பு (1967–1971) எனக்குக் கிடைத்ததை ஓர் அபூர்வ சிறப்பு என்றே கருதுகின்றேன்.

தமிழுலகில் தனக்கென ஒரு பாணியை வகுத்துக்கொண்ட பொன்.முத்துக்குமாரன் அவர்கள் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் தமிழ்ப் புலமையுலகிலிருந்து ஒதுங்கி விடுவாரென்றோ இல்லற ஞானியாகி விடுவாரென்றோ பலர் எதிர்பார்க்கவில்லை. “கல்வி என்னும் பல் கடற் பிழைத்து” கந்தன் கருணைக் கடலை நாடுவோம் என்று அவர் முடிவு செய்தது எனக்கு வியப்பைத் தரவில்லை. நம் முன்னோர் வாழ்வு உணர்த்தும் உண்மைகளைக் கூர்ந்து நோக்கிய பொன்.முத்துக்குமாரன் அவர்கள் ‘கற்பனவும் இனி அமையும்’ என்று எண்ணியமை அவரின் இயல்புகட்கு இசைவானதேயாம். பகட்டும் படாடோபமும் மலிந்த உலகில் பண்பும் பவ்வியமும் நிறைந்த நல்வாழ்வு வாழ்ந்த அந்த அருமை இல்லற ஞானியின் உயிர், உயிர்களின் உயிரான உயிரளங்குமரனின் அருளமுதத்தை நுகர்வதாக, பிறவாப் பெருவாழ்வில் அமைதி பெறுவதாக.

வை.கா.சிவப்பிரகாசம் M.A. Dip. Ed
அதிபர், ஆசிரியர் கலாசாலை, கோப்பாய்

*டிசெம்பர் 1989ல் திரு பொன்.முத்துக்குமாரன் அவர்களின் நினைவு மலரில் வெளிவந்தது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மரபும் வித்துவான் பொன்.முத்துக்குமாரனும்

1961ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் நடைபெற்ற இலங்கைப் பல்கலைக்கழகத்தின் சிறப்புக்கலை இறுதி ஆண்டுத் தேர்விலே, தமிழினைச் சிறப்புப் பாடமாகப் பயின்று தேர்வுக்குத் தோற்றிய இரு மாணவரும் விசேட சித்தி முதற்தரத்திலேயே பெற்றார்கள். இதுவே முதன் முதலாக இலங்கைப் பல்கலைக்கழக வரலாற்றிலே ஓரே துறையிலே சிறப்புப் பாடநெறி பயின்ற யாவரும் விசேட சித்தி முதற்தரத்திலேயே பெற்ற நிகழ்ச்சியாகும். அக்காலத்திலேயே அந்நிகழ்ச்சி மிகுந்த பரபரப்பினை ஏற்படுத்தியது. அந்த வரலாற்று முக்கியத்துவமுடைய நிகழ்ச்சிக்கு நீண்டதொரு பின்னணியுண்டு.

1943இலே தமிழ்ப் பேராசிரியராக நியமனம் பெற்ற சுவாமி விபுலானந்நர் (1892–1947) 1947ஆம் ஆண்டு ஜுலை மாதம் மறைந்ததை அடுத்து, அவருடைய வெற்றிடத்தினை நிரப்ப முற்பட்டபோது, டாக்டர் க.கணபதிப்பிள்ளைக்கு (1903–1968) எதிராகத் தமிழ்த் தவிசுக்குத் திரு சு.நடேசபிள்ளை (1895–1965) அவர்களை யாழ்ப்பாணத் தமிழ் வித்துவாமிசர் பிரசாரம் செய்தனர். திரு சு.நடேசபிள்ளை, B.A. அவர்கள் சேர்.பொன்.இராமநாதன் பெண் கொடுத்த மருகர். அப்போதைய பிரதான இலங்கை அரசியற் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் தமிழ் முக்கியஸ்தர்களிலே ஒருவர். யாழ்ப்பாணத்துப் பண்டித வர்க்கக் காரியங்களிலே முதலிடம் பெற்றுக் கொண்டிருந்தவர். அவரை அன்று யாழ்ப்பாணத்துத் தமிழ்ப் பண்டித வர்க்கம் ஆதரித்தது. ஆயினும் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் தெரிவுக்குழு டாக்டர் க.கணபதிப்பிள்ளையையே தெரிவு செய்தது. அந்தத் தெரிவுக் குழுவிலே இருந்தவர்களில் ஓருவரான வித்தியாஜோதி, பேராசிரியர் ஆ.வி.மயில்வாகனம் (1906–1987) அன்றைய நிகழ்ச்சிகளை 1968இலே எம்மைக் கொழும்புப் பல்கலைக்கழகத்திற்கு தமிழ் விரிவுரையாளராக நியமித்த போது மீட்டுக் கொள்ள வேண்டியிருந்தது.

இலங்கையின் தமிழ்க் கல்வி உயர்பீடங்களிலே இரு கன்னைகள் உருவாகத் தொடங்கிவிட்டன. பண்டித வர்க்கம் ஒரு கன்னையிலும் பல்கலைக்கழகத் தமிழ்த் துறை எதிர்க் கன்னையிலும் நின்றார்கள். ஆயினும் எல்லைக் கோடுகள் அன்று தெளிவாக வரையப் பட்டிருக்கவில்லை. பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையும் விரிவுரையாளர் டாக்டர். சு.வித்தியானந்தனும் (1924–1989) பண்டித வர்க்கத்தினைப் பற்றி அலட்டிக் கொள்ளவில்லை. அவர்களுக்குத் தமிழர்தம் அரசியல்வாதிகளின் ஆதரவு அமோகமாக இருந்தது. சிரேஷ்ட விரிவுரையாளர் வி.செல்வநாயகம், M.A. (1907–1973) அவர்களுக்கு யோகர் சுவாமிகளின் விதானமும் புன்னை மகாவித்துவான் சி. கணேசையர் ஆகியோர் தொடர்பும் பண்டித வர்க்கத்திடையே ஆதரவையும் அநுதாபத்தையும் சம்பாதித்துக் கொடுத்தன.

1947இலே பேராசிரியராக நியமனம் பெற்ற டாக்டர். க.கணபதிப்பிள்ளை 1965இலே ஓய்வுபெற்றபோது, சிரேஷ்ட விரிவுரையாளர் வி.செல்வநாயகம், M.A. பேராசிரியராக நியமனம் பெற்றார். பேராசிரியர் செல்வநாயகம் இலங்கைப் பல்கலைக்கழகம் 1942இலே உருவாகுவதற்கு முன்பிருந்தே பல்கலைக்கழகக் கல்லூரியிலே தமிழாசிரியராக இருந்து வந்தவர். முதன்முறையாக அவருக்குத் தமிழ்த் துறையின் செயற்பாடுகளை வழிநடத்தும் முதன்மை வாய்த்தது. தமிழ்த்துறையிலே பாரம்பரியத் தமிழ்க் கல்விக்கு சிறப்பிடம் கொடுப்பது அவருடைய முக்கிய சிந்தனையாக அமைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் செல்வநாயகம், பாரம்பரியத் தமிழ்க் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நோக்குடன் வித்துவான் பொன். முத்துக்குமாரனை (1920–1989) விரிவுரையாளராக தற்காலிகப் பதவி நியமனம் கொடுத்திருந்தார். வித்துவான் பொன்.முத்துக்குமாரன் அவர்கள் அப்போது ச.அம்பிகைபாகன் தலைமையாசிரியராக (அதிபராக) விளங்கிய வைத்தீஸ்வர வித்தியாலயத்திலே ஆசிரியராகத் திகழ்ந்தார். வித்துவான் பொன்.முத்துக்குமாரன் 1966இலே பேராதனைக்கு வந்தவர் என்று நினைக்கிறேன்.

பொன்னையாலை, மூளாய், காரைநகர், சுழிபுரம் எனும் ஊர்களிலே ஆரம்ப, இடைநிலைக் கல்வியினை முடித்துக்கொண்டு, சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சென்று, 1943இலே வித்துவான் பட்டம் பெற்ற பொன். முத்துக்குமாரன், மீண்டும் அங்கு 1951இலே சென்று 1953இலே கீழைத் தேயக் கல்விமாணிப் பட்டம் பெற்றார். பாரம்பரியத் தமிழ்க் கல்வியினை முறையாகக் கற்றுத் தேறிய வித்துவான் அவர்கள், தமிழ்நாட்டிலும் யாழ்ப்பாணத்திலும் இருபத்திரண்டு வருடங்கள் தமிழாசிரியராகப் பணிபுரிந்த பின்பு பேராதனைக்கு வந்தார். இக்கால எல்லைக்குள்ளே தமிழ் மக்களிடையே நல்ல பேச்சாளர் என்றும் பொன்.முத்துக்குமாரன் பேரெடுத்தவர். பொன்.முத்துக்குமாரனுடைய எழுத்துக்களிலே "தமிழ்மரபு" மொழியறிவிலே – மொழியின் பயன்பாட்டிலே – மொழி மரபுகளின் முக்கியத்துவத்தினைத் தெளிவாக உணர்த்தி நிற்கின்றது. சொல், சொற்றொடர், வாக்கியம் என்னும் மூன்று நிலைகளிலும், வித்துவானவர்கள் கவனம் சென்றிருக்கின்றது. மொழி மரபு என்பது அம்மொழி பேசும் சமூகம் உருவாக்கிக் கொண்டது. அச்சமூகத்திலே அம்மரபுதான் இணைப்பாக அமையும். அம்மரபை உணராது மொழியை அறிந்துகொள்ள முடியாது. ஒரு மொழிக்கு இலக்கணம் எவ்வாறு முக்கியமாகின்றதோ, அவ்வாறே மரபும் இன்றியமையாததாகின்றது.

பேராசிரியர் செல்வநாயகம் பாரம்பரிய தமிழ்க்கல்வியினைப் பல்கலைக்கழகத்திலே அறிமுகப்படுத்த விரும்பியதைப் பொன்.முத்துக்குமாரனின் வரவு எடுத்துக் காட்டுகின்றது. வித்துவான் அவர்கள் திருக்குறள், திருக்கோவையார், சிலப்பதிகாரம் என்பவற்றின் பாடநூற் பகுதிகளையும் தமிழ் இலக்கணத்தையும் மாணாக்கருக்குப் பாடமாக எடுத்தார். தமிழ் இலக்கணத்திலே யாப்பலங்காரக் காரிகை, தண்டியலங்காரம், நன்னூல், தொல்காப்பியம் என்பவற்றின் பகுதிகள் அவர் எடுத்த பாடப்பகுதிகளாகும்.

வித்துவான் பொன்.முத்துக்குமாரனும் யானும் தற்காலிக எனும் அட்டையுடன் இருந்ததால் நெருங்கிப் பழகினோம். வித்துவான் அவர்கள் தூய்மையான உடையுடன் எப்பொழுதும் காட்சி தருவார். நல்ல வேட்டி, கசங்காத சட்டை, மடிப்புக் கலையாத சால்வை எப்பொழுதும் கண்முன்னே வருவன. புன்சிரிப்பு தவழும் அவர் முகத்திலே வாட்டத்தையோ கவலையையோ காணமுடியாது. விரிவுரையாளர் யாவரையும் நன்கு மதித்து, அவர்களுடைய மதிப்பினையும் பெற்றுக்கொண்டார்.

வித்துவான் பொன்.முத்துக்குமாரன் பேராதனையிலே இரு வருடங்கள் தொடர்ந்திருந்தார். ஆனால் அவரை ஆசைகாட்டி அழைத்தவர்கள் அவரை நிரந்தரமாக்கிக் கௌரவிக்க முடியவில்லை. எம்மைப்போல. வித்துவான் அவர்கள், அதே ஆண்டு மீண்டும் யாழ்ப்பாணம் சென்றுவிட்டார். வைத்தீஸ்வர வித்தியாலயம் அவரை அணைத்துக்கொண்டது. அவர் ஒடுக்கத்திலே அமைதி காணத் தொடங்கிவிட்டார். யாழ்ப்பாணத்தின் சிறந்த பேச்சாளர்களில் ஒருவர் மேடையிலிருந்து ஒதுங்கிக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்துவான் பொன். முத்துக்குமாரனை நீண்டகால இடைவெளிக்குப் பின்பு 1982இலே கண்டேன். அவருடைய மகன் தயாநிதியின் திருமணத்திற்கு அவர் கொழும்புக்கு வந்திருந்தார். அவர் சம்மந்தி சண்முகராசா எம்முடைய நண்பர். திருக்கேதீஸ்வர புணருத்தாரண சபையின் நிர்வாகக்குழுவிலே இருவரும் இருந்தவர்கள். அவரிடம் என் விலாசத்தை அறிந்துகொண்டு வெள்ளவத்தையில் இருந்த எம்முடைய வீட்டுக்கு வந்திருந்தார். நான் அடைந்த மகிழ்ச்சிக்கோ அளவில்லை. ஆனால் அந்த மகிழ்ச்சி எல்லாம் வேதனையாயிற்று. பேராதனை வழங்கிய அவமானத்தையும் தனிப்பட்ட துன்பத்தையும் தாங்கித் தாங்கி அவர் கூனிக் குறுகிப்போனார். அவர் தம் மனதிலே ஊறிப் பாரமாகக் கிடந்த துன்பங்களை எம்மிடம் கொட்டி ஆறுதல் காண வந்தாரோ என்று திகைத்தேன். சில மணிநேரம் இருவரும் நேரம் போனது தெரியாமல் மனம்விட்டுப் பேசி ஆறுதல் அடைந்தோம். யாருடைய வீட்டுக்கும் போக விரும்பாதவரும் களைப்பாற விரும்பாதவருமாகிய வித்துவான் அவர்கள் எம்மைத் தேடிவந்து, எமது உபசாரத்தை விரும்பியேற்று, எம்மிடம் தனது சிந்தனைகளைப் பகிர்ந்து கொண்டதை எம் வாழ்விலே பசுமை நிறைந்த நிகழ்ச்சியாகக் கருதிப் பெருமையடைகிறோம். 1982க்குப் பிறகு நண்பர் பொன். முத்துக்குமாரனைக் காணவில்லை. ஆயினும் அவர் தம் மனதினை அமைதிப்படுத்திக் கொண்டார் என்பதை அறிந்து ஆறுதலைடைந்தேன்.

சிட்னிக்குப் பேராதனையைவிட்டு வந்தபிறகு தற்செயலாக நண்பர் சண்முகராசாவின் பாரியாரைக் கண்டேன். அவர் தன்னுடைய மகளையும் மருகனையும் காட்டித் தந்தார். பொன்.முத்துக்குமாரனின் மகன் தயாநிதியை அன்று கட்டித் தழுவியபோது என் மனதிலே பெரும்பாரம் ஒன்று இறங்கியது.

கலாகீர்த்தி பேராசிரியர் டாக்டர். பொன்.பூலோகசிங்கம்
24.08.1999

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழிய முத்துக்குமார நாமம்

ஈழநன் னாட்டில் யாழ்ப்பாண மண்ணில்
ஆழமாய்க் கற்றோர் யாவரும் போற்றும்
மூளாய்ப் பதியில் முதுதவத் தாலே
பொன்னுத் துரையெனும் பொன்மனச் செம்மல்
மாரி முத்தாம் மங்கையை மணந்து
இல்லறம் தன்னை நல்லற மாக
இனிதே நடத்தி யின்புறு நாளில்
முத்துக் குமாரன் எனும் தமிழ் வித்தகர்
இரண்டாம் புதல்வனாய் இவர்க்கு வந்துற்றார்.

சுழிபுரம் தனிலே இளமையிற் கற்றுத்
தெளிந்தவ ரான முத்துக் குமாரன்
அண்ணா மலைப்பல் கலைக்கழ கத்தினில்
வித்துவா னாகியும் பீ.ஓ.எல். ஆகியும்
கற்றவர் போற்று முத்தம ரானார்
பூவரா கம்பிள்ளை எனும்பெரு மகனும்
கதிரேசஞ் செட்டியார் எனுந் தமிழ் முனியும்
ஊட்டிய தமிழை உள்ள முவந்து
நாட்டினர் புகழப் பயிற்றிட லானார்.

தமிழ்நாட் டினிலே கொப்பனாப் பட்டியில்
மேலைச் சிவபுரி என்னு மிடத்தில்
ஆசிரி யப்பணி யாற்றிச் சிறந்தார்
ஈழம் வந்த இத்தமிழ் வித்தகர்
சுழிபுரம் விக்ரோ ரியாக்கல் லூரியில்
சைவப் பெரியார் சிவபாத சுந்தரம்
ஆதியோர் போற்ற அரும்பணி புரிந்தார்
வண்ணை வைத் தீஸ்வராக் கல்லூரி தனிலும்
பேரா தனைப்பல் கலைக்கழ கத்திலும்
ஆற்றிய தமிழ்ப்பணி அளப்பில வாகும்
யாழ்நகர் தனிலே பண்டித வகுப்பினில்
இலக்கண இலக்கியம் சைவசித் தாந்தம்
ஆதிய வற்றை அழகுறப் பயிற்றி
மாணவர் நெஞ்சில் தெய்வமாய் நின்றார்.
ஈழநன் னாட்டில் இணையிலாப் பெரிய
சொற்பொழி வாளராய் மேடைக ளெங்கும்
ஆட்சி புரிந்த ஐயன் எழுதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நூல்களோ பலவாம்! நூல்களோ புதிதாம்!!
'இன்பத் தமிழும்' 'செந்தமிழ்த் தேனும்'
'சிலம்பின் சிறப்பும்' 'தமிழ் மரபும்'
'மாணவர் கட்டுரை' 'சமயக் கட்டுரை'
ஆதிய யாவும் அற்புத மானவை!

சிலம்பின் சிறப்பு சிறீலங்கா அரசின்
சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றது
சாகித்திய மண்டலப் பரிசினை யளித்து
இதனால் கௌரவம் தானே பெற்றது!
சங்கராச் சாரிய சுவாமிகள் மீதிலும்
கிருபா னந்த வாரியார் மீதிலும்
பச்சை யப்ப முதலியார் மீதிலும்
ஆறுமுக நாவல பெருமான் மீதிலும்
பந்து மலையுள சுவாமிகள் மீதிலும்
பக்தி படைத்தவ ரான இவ்வித்தகர்
நல்லை முருகனை நாளும் பணிந்து
ஞானியாய் வாழ்ந்து நற்கதி யுற்றார்
வாழிய முத்துக்குமார நன்நாமம்
ஆழி சூழுலகம் உள்ள வரைக்குமே.

அன்பன்

*டிசெம்பர் 1989ல் திரு பொன்.முத்துக்குமாரன் அவர்களின் நினைவு மலரில் வெளிவந்தது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வித்துவான் பொன்.முத்துக்குமாரனின்
100வது பிறந்த ஆண்டு நினைவையொட்டிய நிகழ்வுகள்...

பொன்.முத்துக்குமாரன் எழுதிய புத்தகங்களில்
“சிலம்பின் சிறப்பு”, “மாணவர் கட்டுரைகள்”, “தமிழ் மரபு”
ஆகிய மூன்றை மறுபதிப்பு – மார்ச் 2020.

முனைவர் அரசேந்திரன் எழுதிய
“பத்தாயிரம் ஆண்டுக்கு முற்பட்ட தமிழ் – இந்தோ ஐரோப்பிய உறவு”
என்ற தமிழ் நூலையும் அதன் ஆங்கில மொழியாக்கத்தையும்
அவுஸ்திரேலியாவின், சிட்னி மாநகரில் வெளியீடு – 8.3.2020

பொன்.முத்துக்குமாரனின் குடும்பக் கோயிலான
அருள்மிகு பொன்னாலை சித்தி விநாயகர் ஆலயத்தின் திருப்பணி வேலைகள்
பெப்ரவரி 2020 ஆரம்பிக்கப்பட்டு, 21.8.2020ல் சிறப்பான குடமுழுக்கு விழா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org